பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 13 செவ்வாய்க்கிழமை 26.03.2024 கதிர் 140

## பவிதரன் கொலையில் மேலும் மூவர் கைது

யாழ். மாவட்டம், வட்டுக்கோட்டை பவிதரன்கடத்திக்கொலைசெய்யப்பட்ட வழக்கில்,பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றூ பொலிஸார் தெரிவித்தனர்.

காரைநகக்குச்சென்றுவிட்டுமனைவியுடன், மோட்டார்சைக்கிளில்வீடு திரும்பிக்கொண்டிருந்த பவிதரனும் அவரது மனைவியும் பொன்னாலைப் பாலத்திற்கு அருகில் உள்ள கடற்படை முகாமிற்கு முன்பாக வைத்துக் வன்முறைக் கும்பல் ஒன்றினால் கார்களில் கடத்திச்செல்லப்பட்டனர். மனைவியை சித்தன் கேணிச் சந்தியில் இறக்கிவிட்டுச் சென்ற அந்தக் கும்பல், பவிதரனை குத்திக் காயப்படுத்திவிட்டு குற்றுயிரும் குலையுயிருமாகவீதியில் வீசிவிட்டுச் சென்றது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ☞ 2

## எந்தத் தேர்தலையும் பிற்போடவென சட்டத் திருத்தம் கொண்டுவரவில்லை

### சொல்கிறார் நீதி அமைச்சர்

தேர்தல்களைப் பிற்போடுவதற்காக தேர்தல் சட்டங்களில் திருத்தங்கள் கொண்டுவரப்படவில்லை என்று நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

1994ஆம்ஆண்டுமுதல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் ஊழலுக்கு எதிராக போராடுவதாகவும் தேர்தல் முறைமையில் திருத்தம் செய்வதாகவும் வாக்குறுதிகள் வழங்கப்பட்டபோதிலும்அவைஎதுவும் நிறைவேற்றப்படவில்லை எனச் சுட்டிக்காட்டிய அமைச்சர், தற்போதைய ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கஊழலைக் கட்டுப்படுத்துவதற்கும் விகிதாசாரத் தேர்தல் முறையை அறிமுகப் படுத்துவதற்கும் ஏற்கனவே திருத்தங்களைச் சமர்ப்பித்துள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்கள் குறித்து மக்கள் அறிந்திருப்பது மிகவும்முக்கியமான ஜனநாயக அம்சமாகும். இந்நாட்டில் தற்போதுள்ள சட்டத்தின்படி, வன் புணர்வு என்பது பெண்ணின் ☞ 8

## இனி இது ரகசியம் அல்ல!

நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் முறையாக வந்ததோ தவறாக வந்ததோ, சட்டமாகி விட்டது. அந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் ஹிக்கடுவையில் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

போலியான முகப்புத்தகக் (பேஸ்புக்)கணக்குகளைபயன்படுத்தி இளம்பெண்ணிடம்பாலியல்லஞ்சம் கோரினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் 21வயதுஇளைஞனையேபொலிஸார் கைது செய்துள்ளனர். ஹிக்கடுவ கோனாபினுவல பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

இவரிடம் 50 முகப்புத்தகக் கணக்குகள் இருந்தன என்று பொலிஸார்கண்டுபிடித்திருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்தி பல இளம் பெண்களின் வாழ்க்கையுடன் விளையாடி வந்திருக்கிறாராம் இந்த மன்மதன்.

முகநூல் சமூக வலைதளத்தில் சுமார் இரண்டு வருடங்களாக தனது நண்பராக இருக்கும் இளைஞன் பல சந்தர்ப்பங்களில் தன்னிடம் தவறான முறையில் பேசுவதாகவும் பாலியல் இலஞ்சம் ☞ 2

## பதில் அமைச்சர் நியமனம்



மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிகளுக்கான பதில் அமைச்சரவை அமைச்சராக இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கம்புர நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன 5 நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஞாயிறு பிற்பகல் சீனாவுக்குப் புறப்பட்டுச் சென்றதன் காரணமாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

# மைத்திரியிடம் சிஐடியினர் 6 மணி நேரம் விசாரணை



உயிர்த்த ஞாயிறு தின குண்டு வெடிப்புக்களுக்குக் காரணமானவர்களைத் தனக்குத் தெரியும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தகருத்துக்குறித்துகுற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நேற்று 8 மணி நேரம் அவரிடம் விசாரணை நடத்தி வாக்குமூலத்தைப் ☞ 2

## மைத்திரி கைது செய்யப்பட்டேதான் ஆகவேண்டும் என்கிறார் கம்பன்பில

### 7 வருட சிறைத்தண்டனைக்கான குற்றத்தை புரிந்துள்ளாராம்

முன்னாள்ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கைதுசெய்யப்பட்டேதான் ஆகவேண்டும். பயங்கரவாததடைச்சட்டத்தின்படி அவர்7வருடகாலகடூழிய சிறைத்தண்டனைக்குரிய குற்றத்தைப்புரிந்துள்ளார். அவரை நாங்கள் நன்கு அறிவோம். உண்மைகளை ஒரு போதும் பகிரங்கப் படுத்தமாட்டார்.

இவ்வாறு பிவிதுரு ஹெலஉறுமயகட்சியின் தலைவரும்,நாடாளுமன்ற உறுப்பினருமானஉதய கம்மன்பிலதெரிவித்தார். கொழும்பில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.அவர்மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் தகவல்தெரிந்தும்அதனை மறைத்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கைது செய்யப்பட வேண்டும் எனநாங்கள்குறிப்பிட்டது அடிப்படையற்றது, நடைமுறைக்குசாத்தியமற்றது எனப்பொலிஸ்மாஅதிபர் குறிப்பிடுகிறார். சட்டத்தின் பிரகாரம்அவ்வாறுமுடியாது என்றும் மைத்திரிபால சிறிசேனவிடம் விசாரணைகளை முன்னெடுத்ததன்பின்னர்அடுத்தக் கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என்றும் அவர் ☞ 2

## இணைந்த சுகாதார கற்கை மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க கேட்டுப் போராட்டம்

### யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்தது



இணைந்த சுகாதாரக் கற்கைகள் மாணவர்களின் வேலை வாய்ப்பை உறுதி செய்யக்கோரி யாழ்ப்பாணத்தில் நேற்று கவனவீர்ப்புப்போராட்டம் நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணப் ☞ 2

## தேவாலயங்களின் பாதுகாப்புக்காக மார்ச் 29, 31இல் சோதனைகள்

### பாதுகாப்பை பலப்படுத்த உத்தரவு

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குக் காரணமானவர்கள் குறித்துத் தனக்குத் தெரியும்என்றுமுன்னாள் ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன பரபரப்பைக் கிழளப்பியுள்ள நிலையில் நாட்டின் தேவாலயங்களின்பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

புனித வெள்ளிக்கிழமையான மார்ச் 29 மற்றும்உயிர்த்தஞாயிறு தினமான மார்ச் 31 ஆகிய இரு நாட்களும் தேவாலயங்களின் ☞ 8

## பாடசாலையில் போசாக்குணவு வழங்கப்படுவது மிக அவசியம்

### 2024 பாடசாலை உணவுத்திட்ட நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு



மாணவர்களுக்கு பாடசாலையில் போசாக்குணவு கிடைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவது மிகவும் அவசியம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டி சுஜாதா மகளிர் கல்லூரியில் நேற்று முற்பகல் இடம்பெற்ற‘2024 பாடசாலை உணவுத் திட்டம்’ ஆரம்பநிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள தரம் 1- முதல் 5 வரையான அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் பாடசாலையில் போசாக்குஉணவுவழங்குவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

போசாக்கு நிபுணர்க-ளின் பரிந்துரைகளை கருத்திற்கொண்டு ☞ 8

## நாடாளுமன்றத்தைக் கலைக்க ரணில் பெரமுனவை கேட்கத் தேவையில்லை

### இப்படிச் சொல்கிறார் ஜி.எல்.பீரிஸ்

நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு பொதுஜன பெரமுன கட்சியிடம் கேட்கவேண்டிய அவசியம் இல்லை. நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கேட்டதாகவும் பெண் ஒருவர் செய்த முறைப்பாட்டையடுத்து, ஆளைக் கோழி அமுக்குவது போன்றுதூக்கியிருக்கிறதுபொலிஸ்.

இத்தனைக்கும் அந்தப் பெண்ணுக்கு காதலன் இருக்கிறார். மன்மதனுக்கு அதுவும் தெரியும். அந்தப் பெண்ணின் காதலனது முகப் புத்தகக் கணக்கை ஹக் செய்து, அதிலிருந்த காதலர்களுக்கு இடையிலான அந்தரங்க உரையாடல்களைஎடுத்துஅதனைக் காட்டி பெண்ணின் நிர்வாணப் படங்களைத் தனக்கு அனுப்பும்படி மிரட்டியிருக்கிறாராம் மன்மதன்.

அதுவும் ஒரு பெண்ணின் பெயரிலானமுகப்புத்தகக்கணக்கின் ஊடாகத்தான் அவர் இந்தக் காய்நகர்த்தல்களைச்செய்துள்ளார். பாதிக்கப்பட்டபெண்ணுடன்நட்பாகிய பின்னர், அவரது ஆடைக ளற்ற படங்கள் ஒரு பாலியல் இணை யத்தில் இருக்கின்றன என்றுகூறி அதனைப் பார்வையிட என்று ஒரு இணைப்பையும்அனுப்பியுள்ளார். ஆனால் அந்தப் பெண் அந்த இணைப்பைப்பார்வையிடவில்லை. அதனால்அந்தஇணைப்பைஅவரது காதலனுக்கு அனுப்பியிருக்கிறார். தான் சொல்வது சரியா பிழையா என்று அந்த இணைப்பைத் திறந்து பார்த்தால் தெரியும் என்று சொல் லியிருக்கிறார். அவர் சொன்னதை நம்பி அந்த இணைப்பை காதலன் திறந்ததும் அதற்கூடாக அவரது கணக்கை ஹக் செய்து அந்தரங்கத் தகவல்களைத் திருடியுள்ளார்.

காதலர்களுக்கு இடையில் பகிரப்பட்ட தனிப்பட்ட ஒளிப்படங் களைத் திருடி அவற்றை 'மார்பிங்' மூலம் நிர்வாணப்படமாக்கி அவ ற்றை இணையத்தில் வெளியிட் டுவிடுவேன் என்று கூறி மிரட்டி யுள்ளார். இதனால் அச்சமடைந்த பெண் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்தார்.

அதன் பின்னர் பொலிஸாரின் அறிவுறுத்தலின் பிரகாரம் சந்தேகநபரை பிடிக்க பிலியந் தலைக்கு வருமாறு அந்தப் பெண் தகவல்அனுப்பியுள்ளார். ஆசையில் ஓடிவந்த அவரை பிலியந்தலை பேருந்து நிலையத்தில் வைத்து அமுக்கிப் பிடித்துவிட்டது பொலிஸ்.

க.பொ.த. உயர் தரம் மட்டுமே சித்தியடைந்துள்ள மன்மத னுக்கு கணினி அறிவு பெரிதாக இல்லை, அப்படியிருந்தும் பேஸ்புக் கணக்குகளை ஹேக் செய்யும் அறிவை ஆன்லைனில் பெற்றுள் ளார்.

பிடிபட்டதும்குறித்தபெண்ணுக்கு சொக்லேட் கொடுப்பதற்காகத்தான் தான் வந்தார் என்று பொலிஸாரிடம் நாடகமாடியிருக்கிறார். ஆளை உள்ளே தள்ளி விசாரிக்கத் தொடங் கியிருக்கிறது பொலிஸ்.

நிகழ்நிலைச் சட்டங்களின் கீழ் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## மைத்திரியிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிவு செய்தனர்.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் சாட்சியம் வழங்க அவர் குற்றப்புலனாய்வு பிரிவிற்கு வருகை தந்திருந்தார். மாலை 4.30 மணியளவில் அங்கிருந்து வெளியேறினார். பிரதான வாயில் வழியாக அவர் உள்நுழைந்தபோதும், வெளியே காத்திருந்த செய்தியாளர்களைச் சந்திக்காமல் வேறு ஒரு பாதை வழியாக அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திலிருந்துவெளியேறிச் சென்றார்.

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புக்க் காரணமானவர்களைத் தனக்குத் தெரியும் என்று மார்ச் 22 மைத்திரிபால தெரிவித்திருந்தார். இதனால் பெரும் சர்ச்சை எழுந்தது. அவரைக் கைது செய்யவேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்தன. இந்தத்தகவல்களைமறைத்துவிட்டார் என்று விமர்சிக்கப்பட்டது.

இதனையடுத்து மூன்று வாரங்களுக்கு முன்பே தனக்கு அது பற்றித் தெரியவந்தது என்று மைத்திரி விளக்கமளித்தார். அவரது கருத்துத் தொடர்பில் வாக்குமூலம் பெறும்படி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பொலிஸ் மாஅதிபருக்குஅறிவுறுத்தியிருந்தார். அதற்கமைய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு வருகை தருமாறுஅவருக்குஅழைப்பாணை அனுப்பப்பட்டது.

## நாடாளுமன்றத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையின்கொழும்புஅலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தல் நடத் தப்பட வேண்டும் என ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன ஜனாதிபதியி டம் முன்வைத்த யோசனையை ஜனாதிபதி நிராகரித்து அரசமைப் பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் என்று குறிப்பிட் டுள்ளதாகவும் செய்திகள் வெளியா கியுள்ளன.

பொதுஜனபெரமுனமுன்வைத்த யோசனையை ஜனாதிபதி பரிசீ லனை செய்வதாகவும் தற்போது குறிப்பிடப்படுகிறது. நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கும், நாடாளுமன்றத்தைகலைப்பதற்கும் ஜனாதிபதிபொதுஜனபெரமுனவிடம் ஆலோசனை கோர வேண்டிய அவசியம் கிடையாது. நாடாளு மன்றத்தைக்கலைத்து பொதுத்தேர் தலை நடத்தும் அதிகாரம் ஜனாதிப திக்கு அரசமைப்பால் வழங்கப் பட்டுள்ளது.

அரசமைப்புபிரகாரம்எதிர்வரும் செப்டெம்பர் 17 முதல் ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும். எதிர்வரும் ஜூலைமாதம்17ஆம்திகதிஜனாதிபதி தேர்தல் தொடர்பான அறிவிப்பை தேர்தல்கள்ஆணைக்குழுவெளியிட வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலுக்கான உத்தியோகப்பூர்வ அறிவிப்பு வெளியானதும் 16 நாட்களுக்கு குறையாமலும், 21நாட்களுக்குமேல் அதிகரிக்காமலும்வேட்புமனுதாக்கல் செய்யப்பட வேண்டும் அதனை தொடர்ந்து 42 நாட்களுக்குள் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். நிதி இல்லை என்று குறிப்பிட்டுக் கொண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட்டதை போன்று ஜனாதிபதி தேர்தலை பிற்போட முடியாது - என்றார்.

## பவிதரன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுத்து வரும் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவுப் பொலிஸார் இந்தக் கொலை தொடர்பான சந்தேகத்தில் ஏற்கனவே ஆறு பேரைக் கைது செய்துள்ளது. அவர்கள் அனைவரும் மார்ச் 28 வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அடையாள அணிவகுப்பின்போது அவர்களில் இருவர் பவிதரனின் மனைவியால் அடையாளம் காட்டப்பட்டனர்.

தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்து வந்த மாவட்ட குற்றத்தடுப்புப்பொலிஸார்வவுனியா , ஒட்டுசுட்டான் மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில்தலைமறைவாகி இருந்த பிரதான நபர்களில் ஒருவர் உள்ளிட்டமூவரைக்கைதுசெய்துள் ளனர்.

சந்தேகநபர்களுக்குஅடைக்கலம் கொடுத்த நபர்களுக்கு எதிராகவும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தேடப்படும் சந்தேகநபர்களுக்கு அடைக்கலம் கொடுப்பது சிறைத்தண்டனைக்கு உரிய குற்ற மாகும். எனவே வட்டுக்கோட்டை சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுத்து பாதுகாக்கும் நபர்கள் குறித்துப் பொலிஸாருக்கு அறிய தருமாறுபொலிஸார்கோரியுள்ளனர்.

## மைத்திரி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடுவதுதான் தவறு,

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புக்கள் தொடர்பில் முறையான விசாரணைனகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதா என்பது சந்தேகத்துக்கிடமானதாக காணப்படுகிறது.குண்டுவெடிப்புக்களை யார்நடத்தியது என்பதைதான்நன்கு அறிவதாகமைத்திரிபாலசிறிசேனமிகத் தெளிவாகக்குறிப்பிட்டுள்ளார்.அத்துடன் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தால் அந்த தகவலை இரகசியமான அறிவிப்பதாகவும்தெரிவித்துள்ளார்.

ஒருகுற்றம்தொடர்பிலோஅல்லது குற்றத்துடன் தொடர்புடைய தகவல் தொடர்பிலோ தெரிந்தால் அதனை பொலிஸாருக்குஅறிவிக்கவேண்டுமே தவிர நீதிமன்றத்திடம் சென்று தெரிவிக்க முடியாது. பயங்கரவாதச் செயற்பாடுகள் தொடர்பில் தகவல் தெரிந்தும் அதனை மறைப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

1979 பயங்கரவாத தடைச்சட்டத் தின் 5 ஆவது உறுப்புரையில் ' பயங்கரவாதசெயற்பாடுதொடர்பான தகவல் அல்லது அது தொடர்பான தகவல்களை அறிந்த நபர் அதனை பொலிஸிற்கு அறிவிக்காமல் இருப்பது 7 வருடகால கடூழிய சிறை தண்டனைக்குரிய குற்றமாகும்' என குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாததாக்குதல்தொடர்பில் தகவல்களைஅறிந்திருந்தும்அதனை மைத்திரிபால சிறிசேன பாதுகாப்பு தரப்புக்கு அறிவிக்கவில்லை.ஆகவே இவர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் பிரகாரம் ஏழு ஆண்டுகால கடூழிய சிறைதண்டனைக்குரிய குற்றத்தை புரிந்துள்ளார். ஆகவேசட்டம்தெளிவாக உள்ளது. மைத்திரிபால சிறிசேன கைது செய்யப்பட வேண்டும்.

மைத்திரிபால சிறிசேனவை நாங்கள் நன்கு அறிவோம். ஆகவே அவர் ஒருபோதும் உண்மையை குறிப்பிட மாட்டார். அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சரை கைது செய்துபொலிஸ்தனதுசுயாதீனத்தை உறுதிப்படுத்தியுள்ளது.அதேபோல் முன்னாள் ஜனாதிபதியையும் கைது செய்து தனது சுயாதீனத்தை பொலிஸ் உறுதிப்படுத்தும் என்று எதிர்பார்க்கிறோம்.

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புக்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டவிசாரணைகளைகொண்டு பலருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகவும், தகவல்கள் தெரிந்தால் அதனை பாதுகாப்பு தரப்புக்குஅறிவிக்குமாறுபொதுமக்கள் பாதுகாப்புஅமைச்சர் குறிப்பிடுகிறார். குண்டுத்தாக்குதல் தொடர்பில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் மைத்திரிபாலசிறிசேன குறிப்பிட்டுள் ளார் ஆகவே மக்கள் நம்பிக்கை கொள்ளும்வகையில்விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும்என்பதை வலியுறுத்துகிறோம் - என்றார்.

## இணைந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக மாணவர் ஒன்றி யத்தின் ஏற்பாட்டில் நேற்று நண்பகல் 12 மணியளவில் யாழ் பல்கலைக்கழக இணை சுகாதா ரக் கற்கைகள் பீடத்தில் இருந்து தொடங்கிய இந்தப் போராட்டம், பேரணியாகப் பலாலி வீதி ஊடாகப் பல்கலைக்கழக பிரதான நுழைவாயில் வரை சென்றது. அங்கு மாணவர்கள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்..

இணைந்தசுகாதாரக்கற்கைகள் மாணவர்களின் வேலைவாய்ப்பில் ஆளும் தரப்புக் காட்டிவரும் அசமந்தமான போக்கினை உடன் நிறுத்தி, தரமான சேவையை மக்களுக்கு வழங்க, இணைந்த சுகாதாரவிஞ்ஞானபட்டதாரிகளுக்கு நியமனங்கள்வழங்கப்படவேண்டும் எனக் கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப்போராட்டத்தில்இணைந்த சுகாதார கற்கைகள் பட்டதாரிகள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்



காலைக்கதிர் Kalaikkathir

# தன் தாடி, தலைமுடியால் 60 வயது திருச்செல்வம் பட்டாரக வாகனத்தை 1000 மீற். இழுத்துச் சாதனை







யாழ்ப்பாணம் தென்மராட்சியைச் சேர்ந்த 60 வயதான செல்லையா திருச்செல்வம் தனது தாடியாலும் தலை முடியாலும் ஏஷ் பட்டா ரக வாகனத்தை 1000 மீற்றர் தூரம் வரை இழுத்து உலக சாதனை நிகழ்த்தியுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் கொழும்பு காலி முகத்திடலில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

1000 மீற்றர் தூரத்துக்கு வாகனத்தை தனது தாடியாலும் முடியாலும் இழுத்து உலக சாதனையை நிகழ்த்துவதே திருச்செல்வத்தின் நோக்கமாக அமைந்தது.

அதற்கமைய 1550 கிலோ கிராம் எடையுடைய ஏஷ் பட்டா ரக வாகனத்தை 500 மீற்றர் தூரத்துக்கு தாடியாலும், 500 மீற்றர் தூரம் வரை தலை முடியாலும் இழுத்து திருச்செல்வம் சாதனை படைத்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் உலக சாதனை புத்தக நிறுவனப் பிரதிநிதிகள் இந்த சாதனை நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

இதன்போது வாகனத்தை இழுத்துவந்த செல்லையா திருச்செல்வத்தை ஆரம்பம் முதல் சாதனையை நிலைநாட்டும் வரையில் அமைச்சர் உற்சாகப்படுத்தி வந்தார்.

இந்த நிகழ்வை சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் பிரதிநிதிகள் நேரடியாக அவதானித்து திருச்செல்வத்தின் சாதனையை அங்கீகரித்து, பதக்கத்தையும் விருதையும் பட்டயத்தையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கரங்களால் வழங்கிவைத்தனர்.

சாதனை நாயகனான செல்லையா திருச்செல்வம் (வயது 60) கடந்த பத்தாண்டுகளாக தனது தலைமுடியாலும், தாடியாலும் வாகனங்களை இழுப்பது, தனது உடலின் மீது வாகனத்தை ஓடவிடுவது போன்ற சாதனைகளை நிலைநாட்டி வருகிறார்.

60 வயதான சாதனை நாயகன் அண்மையில் சாவகச்சேரி பஸ் நிலையத்தின் அருகில் 1550 கிலோ எடையுள்ள வாகனத்தை 1500 மீற்றர் தூரம் வரை 45 நிமிடங்களில் இழுத்து சாதனை படைத்துள்ளார்.

இந்நிகழ்வு வட மாகாண ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்றது.

இம்முறை சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் செல்லையா திருச்செல்வத்தின் பெயரும் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

# கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிறப்பாக நடந்த சர்வதேச வனதினம்

**'புதிய வரவும் புதிய மரமும்' திட்டத்தின் கீழ் பிறக்கும் குழந்தைக்கும் ஒவ்வொரு மரக் கன்று**

( வி.ரி.சகாதேவராஜா)



சர்வதேச வன தினத்தையொட்டி கல்முனை ஆதார வைத்தியசாலையில் பெருநிகழ்வு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வு வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்தியர் இரா. முரளீஸ்வரன் தலைமையில் வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

வைத்தியசாலை திட்டமிடல் பிரிவினரின் ஏற்பாட்டிலும் தரமுகாமைத்துவ பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் ப.செல்வகுமாரின் ஒருங்கிணைப்பிலும் மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதிகளாக அம்பாறை மாவட்ட வன அலுவலர் ஆர்.எம்..விஜயபால, அம்பாறை மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உதவிப்பணிப்பாளர் எஸ்.உதயராஜன், விசேட அதிதிகளாக அம்பாறை மாவட்ட உதவி வன அலுவலர் கலாநிதி.எம்.ஏ..ஜாயா,அம்பாறை மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பிரிவு பிரதிப்பணிப்பாளர் எச்.பி.அனீஸ், கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ், கல்முனை வடக்கு வைத்திய அதிகாரி பணிமனையின் வைத்திய அதிகாரி டாக்டர் ந.ரமேஸ், கல்முனை பிரதேச சுற்றாடல் சபை அதிகாரி திருமதி.பி. செவ்வேற்குமரன், அக்கரைப்பற்று வன வள பாதுகாப்பு அதிகாரிகளான எஸ்எம்.. சபிக் மற்றும் ஏ. தியாகராஜா, கல்முனை கடற்படைத்தள கட்டளைத் தளபதி தம்மிக்க எக்கனாயக்க போன்றோர் கலந்து கொண்டிருந்தனர். முதலில் கல்முனை ஆதார வைத்தியசாலையின் ' பசுமைப் புரட்சியை நோக்கிய பயணம்' தொனிப்பொருளுக்கான இலட்சினை திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து மர நடுகை நிகழ்வும் நடைபெற்றது. மேலும் 'புதிய வரவும் புதிய மரமும்' எனும் தொனிப்பொருளின் ஊடாக வைத்தியசாலையில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு மரக்கன்று வழங்கப்படும். அதன் முதற்கட்டமாக மகப்பேற்று விடுதியில் அன்றைய தினம் பிறந்த 8 குழந்தைகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை மாணவர்களினால் வரவேற்பு நடனம் மற்றும் 'காடுகளைப் பாதுகாப்போம்' என்ற தலைப்பில் விழிப்புணர்வு நாடகம் ஆகிய நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன. மேலும் மாணவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டு கௌரவிப்பும் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட உதவி வன அலுவலர் கலாநிதி ஜாயாவின் வன பாதுகாப்பு சம்பந்தமான உரை நிகழ்த்தப்பட்டது.

தொடர்ந்து அம்பாறை மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பிரிவு பிரதிபணிப்பாளர் அனீஸ் உரையாற்றினார். அவர் மரங்களின் முக்கியத்துவம் மற்றும் சூழல் பாதுகாப்பு சம்பந்தமான விடயங்களை பகிர்ந்து உரையாற்றினார். தொடர்ந்து பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட அம்பாறை மாவட்ட வன அலுவலர் விஜயபாலவின் உரை நிகழ்த்தப்பட்டது. தொடர்ந்து பிரதம அதிதிகளான அம்பாறை மாவட்ட வன அலுவலர் .விஜயபால, அம்பாறை மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உதவிப்பணிப்பாளர் உதயராஜன் ஆகியோருக்கு வைத்தியசாலையின் பணிப்பாளரால் மரக்கன்று வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் இங்கு கடமையாற்றும் ஊழியர்களுக்கும் மரக்கன்றுகளும் வழங்கிவைக்கப்பட்டன.

வைத்தியசாலை பிரதிப்பணிப்பாளர் டாக்டர் ஜே. மதன் நன்றியுரையாற்றினார்.

நிகழ்வில் வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள், விடுதி பொறுப்பு வைத்திய அதிகாரிகள், வைத்திய அதிகாரிகள், கணக்காளர், தாதிய பரிபாலகர், பரிபாலகி, நிர்வாக உத்தியோகத்தர், அனைத்து பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் மற்றும் ஓட்டோ சாரதிகள் சங்க உறுப்பினர்கள் மற்றும் வைத்தியசாலையின் நலன்விரும்பிகள் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர். நிகழ்வை தமிழ் மொழியில் சுகாதார கல்வி பிரிவு பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் திருமதி என்.மனோஜினி மற்றும் சிங்கள மொழியில் பேச்சு மற்றும் மொழி சிகிச்சை பிரிவின் பொறுப்பு உத்தியோகத்தர் செல்வி ரி.யாபா ஆகியோர் தொகுத்து வழங்கியிருந்தனர்.(05)

# தேர்தல்களை எதிர்கொள்வது தொடர்பில் ரவி தலைமையில் வவுனியாவில் சந்திப்பு





தேர்தல்களை எதிர்கொள்வது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஸ்ட உறுப்பினரும், முன்னாள் நிதி அமைச்சருமான ரவி கருணாநாயக்கா தலைமையில் வவுனியாவில் மக்களுடன் கலந்துரையாடல் ஒன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

மேற்படி கலந்துரையாடல் வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

இதன்போது, ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர் ரவி கருணாநாயக்க கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினார். இதன்போது வன்னித் தேர்தல் தொகுதியில் வவுனியா மாவட்டத்தில் அதிக மக்கள் உள்ள நிலையில் இந்த மாவட்டத்தில் சரியான நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை. இதற்காக அடுத்த தேர்தலை சரியாகக் கையாள்வது தொடர்பிலும், பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்திய இந்த ஆட்சியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும் கருத்துரைத்தார்.

அத்துடன், கட்சி ஆதரவாளர்கள் மற்றும் பொது மக்களின் கேள்விகளுக்கும் பதில் அளித்தார்.

இந்நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி தேர்தல் தொகுதி அமைப்பாளர் ம.மயூரதன், ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட மட்ட உறுப்பினர்கள், பல்வேறு சுயேட்சைக் குழுக்களில் கடந்த காலங்களில் போட்டியிட்டவர்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

(05-100)

கலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நிலையான அபிவிருத்தியை அடைவது எப்படி?

இலங்கை ஏற்றுமதி மையப் பொருளாதாரத்திற்கு மாறவேண்டும் என்று அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார். கேகாலை மாங்கெதர தெம்பிட விகாரைக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்ட பொதிகரா மற்றும் தங்க வேலி திறப்பு விழாவில் பங்குனி 20 பேசியபோதும் அவர் இதனை வலியுறுத்தியிருந்தார். இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கு இடையிலான ஏற்றத்தாழ்வை நிவர்த்தி செய்வதற்கு இலங்கை தொடர்ந்தும் கடனில் தங்கியிருந்தால், ஒரு தசாப்த காலப்பகுதிக்குள் தேசம் மற்றுமொரு பொருளாதார நெருக்கடியை தவிர்க்க முடியாமல் எதிர்கொள்ளும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

அதே வாரத்தில், பன்னாட்டு நாணய நிதியமும் (ஐஎம்எவ்), இலங்கையின் தற்போதைய பொருளாதாரம் குறித்து இதேபோன்ற எச்சரிக்கையை வழங்கியது. நான்கு வருட விரிவாக்கப்பட்ட நிதி வசதி (EFF) திட்டத்தின் கீழ் 3 பில்லியன் டொலரை வழங்குவதற்கான இரண்டாவது மீளாய்வுகள் முடிவடைந்த பின்னர் கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய நாணய நிதியத்தின் பீட்டர் ப்ரூயரும் இதனையே கூறினார். கத்திமுனையில் நடக்கும் சாகசத்துக்கு ஒத்தது என்று அவர் தெரிவித்தார்

ஜனாதிபதிதனதுஉரையின்போதுநாட்டின்நிதிநிலைமையை வலுப்படுத்தும் ஆளும் தரப்பின் உடனடி திட்டங்களை விளக்கினார். கடந்த வாரம் முடிவடைந்த சர்வதேச நாணய நிதியத்துடனான பணியாளர்கள் மட்ட விவாதங்களுக்கு இணையாக, சீனாவுடனான கலந்துரையாடல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன, மேலும் தனியார் கடன் வழங்குநர்களுடன் கலந்துரையாடல்கள் நடந்து வருகின்றன, என்றார். இவை அனைத்தும் ஜூன் மற்றும் ஜூலை மாதத்திற்குள் முடிவடைந்தவுடன், இலங்கை தனது கடன்களை திருப்பிச் செலுத்த முடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். இப்போது எங்களுடன் வணிகத்தில் ஈடுபடத் தயங்கும் பல வங்கிகள் மற்றும் நிறுவனங்கள் எங்களுடன் மீண்டும் வணிகத்தைத் தொடங்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

உண்மையில் நாணய நிதியத்தின் பொருளாதார மீட்புத் திட்டமும் ஒரு கடன்தான். அதுவும் இலங்கையின் படுகடன் அளவை அதிகரிக்கவே செய்கின்றனர். தவிர்க்க முடியாதது ஆயினும் இந்த உதவி இன்றி இலங்கையால் மீளவே முடியாது. அதேநேரம் கடன்களும் அதிகரிகத்துக்கொண்டே செல்கின்றன. ரணிலும் இதனை ஏற்றுக்கொள்கின்றார்.

'நாட்டின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவது மாத்திரம் எங்களுடைய அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்காது, ஏனெனில் நாம் தற்போது இறக்குமதியை நம்பியுள்ளோம், இது வர்த்தக ஏற்றத்தாழ்வுக்கு வழிவகுக்கிறது, இறக்குமதியை விட ஏற்றுமதி குறைவாக உள்ளது. இந்த இடைவெளி, வெளிநாட்டுக் கடன்கள் மூலம் அடிக்கடி குறைக்கப்படுகிறது, இது ஒரு தசாப்தத்தில் மற்றொரு பொருளாதார நெருக்கடிக்கு நம்மைத் தள்ளிவிடும். ஆனால் அந்த ஆபத்திலிருந்து வெளியேறுவதற்கான வழி பற்றி அவர் எதுவும் சொல்லவில்லை.

'நான்கு முக்கிய தூண்களில்' கட்டமைக்கப்பட்ட 'தேசிய மாற்றத்திற்கான பாதை வரைபடத்தை' கடந்த ஆண்டு ஜூன் 1 ஆம் தேதி ஜனாதிபதி விக்கிரமசிங்க தேசத்திற்கு ஒரு சிறப்பு அறிக்கையில் முன்வைத்திருந்தார். அதில், 'தென் கொரியா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளின் வெற்றிகரமான மாதிரிகளைப் பின்பற்றி, உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமாக இலங்கையை மாற்றுவதே எங்களின் இலக்காகும். பச்சை ஹைட்ரஜன், மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் போன்றவற்றின் ஊடாக நாம் இவற்றைச் செய்யலாம். இந்தியாவின் ஆந்திரப் பகுதியிலிருந்து இதற்கான மாதிரியை நாம் எடுக்கலாம் என்றார்

பேசப்பட்ட வேகத்திற்கு அதனை எப்படிச் சாத்தியமாக்கப் போகின்றோம் என்கிற எந்தவொரு விவரமும் வெளியிடப்படவில்லை. எனவே முதலில், ஏற்றுமதிப் பொருளாதாரத்தை நோக்கி நாட்டை வழிப்படுத்திச் செல்வதற்கான திட்டம் என்ன என்பதை ஆளும் தரப்பு வெளிப்படுத்தவேண்டும். அதற்கான வழி வரைபடத்தையும் உருவாக்கிக்கொள்ளவேண்டும். நிலையான அபிவிருத்தியை நோக்கி நகர அதுவே உசிதமானது.

# கற்பகதரு என்னும் அற்புதம்

## இரும்பாயமையும் எங்கள் பனை

அங்கம் – 34



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், அவுஸ்திரேலியா.

இரும்பினைக் கண்டு பிடிக்க முன்னரே இரும்பு போன்ற ஒன்று எங்களுக்கு அயலிலேயே இருந்தது. என்ன ஆச்சரி யமாக இருக்கிறதா ? அறியும் ஆவல் ஏற்படுகிறது அல்லவா ? அது வேறு எதுவுமே இல்லை. எங்களின் சொந்த மரம் பனைதான் அதுவாகும்.இரும்பை ஒத்த வலிமை உடையதாக பனை இருந்திருக்கிறது என்பது எமக்கெல்லாம் பெருமையாக இருக்கிறதல்லவா ! ஏறக்குறைய நூற்று இருபது வருடங்கள் வரையிலும் பனைமரம் இருக்கும் என்று அறிந்திட முடிகிறது. மனிதனது வாழ்நாளும் நூற்று இருபது வருடங்கள் என்று பொதுவாகவே சொல்லப்பட்டாலும் அந்தளவு காலத்துக்கு வாழ்வது என்பது அரிது என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டி இருக்கிறது. எனவே மனிதனைவிடப் பனையின் ஆயுட்காலம் என்பது நீண்டதாகவே இருக்கிறது என்பதை மனமிருத்துதல் முக்கியமாகும். மனிதன் மாநிலத்தில் நீண்ட காலம் வாழ்ந்தாலும் அவனிடத்து காணப்படும் வள்ளல் தன்மையை விடப் பனையிடம் காணப்படும் வள்ளல் தன்மை மிகவும் சிறப்பானதாகும் என்பதும் நோக்கத்தக்கது. பனையானது அடியிருந்து நுனி வரை எல்லாவற்றையுமே மற்றவர்களுக்குப் பயன்படும் வகையில் கொடுத்தபடியே இருக்கிறது. தனக்குத் தேவை யான அனைத்தையுமே மனிதன் பனையிடமிருந்து பெற்றுக் கொண்டே இருக்கிறான் என்பது மறுக் கமுடியாத உண்மையெனலாம்.







கறுப்பாய் இருந்தாலும் கொடையில் கர்ணணாகவே பனை இருக்கிறது. உயிரோடு இருந்தாலும் பயனாகிறது. அதன் வாழ்வினை நாம் முடித்தாலும் அது எப்படியே பயனைக் கொடுத்தே நிற்கிறது. இதனால்த்தான் "பனை என்பது நல் வரம் " என்று சொல்லப்படுகிறது. உயிருள்ள பனையை அதாவது பச்சைப் பனையை மனிதன் தறிக் கிறான். தறிக்கப்பட்டு நிலத்தில் விழும் பனை பல விதங்களில் உதவிடக் கைகொடுத்து நிற்கிறது.இதுதான் பனை யின் பெருந் தயாள குணமெனலாம்.

வைரம் என்பது பனை பெற்றுவந்த வரமாகும். ஆரம்பத்திலிருந்தே தென்னையானது பனையுடன் போட்டி போட் டுக் கொண்டே வந்திருக்கிறது. பனையைப் போல தென்னையையும் தறிக்கிறார்கள். பனையைப் பயன் படுத்து வதைப் போல தென்னையையும் பயன் படுத்துகிறார்கள். ஆனால் பனையில் காணப்படும் வைரம் தென்னையில் இல்லை. அதனால் பனை தான் முன்னோக்கி நிற்கும் நிலை ஏற்படுகிறது. தென்னை இங்கும் பனையைப் பார்த்து ஒதுங்கியே நிற்க வேண்டி ஏற்பட்டுவிடுகிறது,ஆனாலும் தென்னையும் பனையுடன் சரிசமமாக வந்திடவே ஒவ் வொரு தடவையும் முயற்சித்தபடியே இருக்கிறது.

வடலி என்பது வளருகின்ற இளம்பருவமான பனையாகும். பனை மரத்தில் வைரம் என்பது அது வாங்கிவந்த வர மென்றே கொள்ள வேண்டும். பனை வளர வளர அதன் வைரத்தின் அளவும் கூடிக் கொண்டே போகும்.மனிதன் சற்று வித்தியாசமானவன். அவனுடைய உடலிலும் வளர வளர உரமேறிய தாகவே வந்துகொண்டிருக்கும். ஆனால் ஏறிய உரமானது நிரந்தரமாக

(7ஆம் பக்கம் பர்க்க...)

# பொலிஸ் ஆலோசனை குழு மிகவும் சக்தி வாய்ந்த ஒன்று

## உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் சனத் பண்டார தெரிவிப்பு

(வி.ரி.சகாதேவராஜா )

ஒரு பிரதேசத்தில் உள்ள பிரதேச பொலீஸ் ஆலோசனை குழு என்பது மிகவும் சக்தி வாய்ந்தது. அதன் அதிகாரம் பரந்துபட்டது.

இவ்வாறு உதவிப்பொலீஸ் அத்தியட்சகர் சனத் பண்டார காரைதீவு பிரதேச பொலீஸ் ஆலோசனை குழுவை சந்தித்துப் பேசிய பொழுது குறிப்பிட்டார்.

காரைதீவுப் பிரதேசபொலீஸ் ஆலோசனை குழுக் கூட்டம் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.எஸ்.ஜெகத் தலைமையில் சனிக்கிழமை மாலை பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது .

அங்கு அக்கரைப்பற்று இறக்காமம் நிந்தவூர் காரைதீவு ஆகிய பொலீஸ் நிலையங்களுக்கு பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சனத் பண்டார பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு ஆலோசனை குழுவினருடன் கலந்துரையாடினார்.

காரைதீவு பிரதேச பொலீஸ் ஆலோசனை குழுவில் அங்கம் வகிக்கும் பி.ரி. தர்மலிங்கம், வி.ரி.சகாதேவராஜா, எஸ். ரவீந்திரன், மௌலவி ரியால் , நியாஸ், நலீம், முனாப் மௌலவி பாரீஸ், மௌலவி நளீம் ஜீவாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் -

நான் யாழ்ப்பாணத்தில் பிறந்தவன். திருக்கோயிலிலே பொலீஸ் நிலையப் பொறுப்பதி காரியாக பணியாற்றியபோது அங்கு ஒரு தடவை பதவி நீக்கம் செய்யப்பட்டு நான்கு நாள்களுள் அங்குள்ள பிரதேச பொலீஸ் ஆலோசனைக் குழுவினர் பொலீஸ் மா அதிபரைச் சந்தித்து என்னை அந்த பதவிக்கு மீண்டும் அமர்த்தினார்கள் .அதன் பின்பு எனக்கு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி உயர்வும் கிடைக்கப்பெற்றது. அந்த அளவுக்கு பிரதேச பொலீஸ் ஆலோசனை குழுவிற்கு மிகவும் கூடுதல் அதிகாரம் இருக்கிறது. சக்திவாய்ந்த அமைப்பு அது.

திருக்கோவில் பிரதேசத்தில் 99 வீதம் போதைப்பொருள் பாவனையை அதிரடி படையினருடன் சேர்ந்து தடுத்திருந்தேன். அப்போது இருந்த பிரதேச செயலாளர் ஜெகராஜன் மற்றும் பலர் எனக்கு உதவினார்கள் .

இன்றும் திருக்கோவில் மக்கள் என்னை பற்றி பேசுவார்கள் .அதை போன்று காரைதீவு மக்கள் இங்கு உள்ள பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெகத்தை சொல்ல வேண்டும்.

பொலீஸ் ஆலோசனை குழுவினருக்கு சமுதாயத்தில் மிகுந்த மதிப்பு இருக்கின்றது. அவர்களுக்கு அதிகாரம் கூட . பொலீஸில் ஏதாவது முறைகேடு இடம் பெற்றால் அதனைத் தட்டிக் கேட்பதற்கு உரிமை இருக்கின்றது. முறையிட்டால் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியும்.

உங்களது ஒத்துழைப்பு இந்த பிரதேச மக்கள் நிம்மதியாகவும் பாதுகாப்பாக இருப்பதற்கு மிகவும் அவசியம். உங்களது சேவையை மதிக்கிறேன். - என்றார்.

இறுதியில் ஆலோசனை குழுவினரின் கருத்துக்களும் பெறப்பட்டன.

இங்கினியாகலகுளம் உடைந்து நள்ளிரவில் பெரு வெள்ளம் கிராமத்துக்குள் புகுந்த பொழுது காரைதீவு பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெகத் தலைமையிலான குழுவினர் அந்த நடுநிசியில் குறித்த பிரதேசத்திற்கு சென்று மக்கள் பாதுகாப்பில் ஈடுபட்டார். மற்றும் காரைதீவு பாதுகாப்பு தொடர்பாக இரவு பகலாக சேவையாற்றி வருவதாக குழுவினர் திருப்தியும் நன்றியும் தெரிவித்தனர் .(05)

# அரசு ஊழியர்களின் கலைத்திறனை வளர்க்க திறமை நிகழ்ச்சி என்ற வேலைத் திட்டங்கள்

## காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தில் ஆரம்பம்





அரச ஊழியர்களின் கலைத்திறனை மேம்படுத்தும் நோக்கில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களிலும் விசேட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கமைய இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதன் முதற்கட்டமாக இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் திறமை நிகழ்ச்சி எனும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது.

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹிரான் பாலசூரியவின் அழைப்பின் பேரில், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில், இந்த திறமை நிகழ்ச்சி அண்மையில் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபன ஊழியர்கள் தமது திறமைகளைக் காட்டினர்.

இந்நிகழ்வில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், பணிப்பாளர் நாயகங்கள் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.(05)



காலைக்கதிர் Kalaikkathir



# கற்பகதரு என்னும் அற்புதம்......



(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நின்றுவிட மாட்டாது. மனிதனின் இளமைக்காலம் என்று சொல்லப்படும் காலத் தில் காணப்படும் உரமானது அவனுது வயது முதிர்ந்த காலத்தில் அவனுடம்பில் இருப்பதில்லை.ஆனால் பனை மரமோ அதன் வயது அதாவது வருடங்கள் கூடக்கூட வைரத்தின் அளவும் கூடிக்கொண்டே போகிறது என்பதுதான் மனமிருத்தவேண்டிய கருத்தெனலாம்.நாற்பது முதல் ஐம்பது வருடங்கள் வளர்ந்த பனையில் வைரமானது ஒன்ற ரை அங்குலத்துக்கு நிறைந்திருக்கும். நாற்பத்து ஐந்துமுதல் அறுபது வருடங்கள் ஆன பனையின் வைரமானது இர ண்டரை அங்குலம் முதல் நான்கு அங்குலம் வரை நிறைந்ததாயிருக்கும். அறுபதுமுதல் தொண்ணூறு வருடங்கள் வளர்ந்த பனையில் வைரமானது ஐந்து அங்குலம் தொடக்கம் ஆறு அங்குலம் வரை நிறைந்திருக்கும். தொண்ணூறு முதல் நூற்று இரு பது வருடங்கள் வரை இருக்கும் பனையில் வைரத்தின் அளவு ஆறு அங்குலம் எனத் தொடங்கி மரம் முழுவதுமே வைரமாகிவிடும் தன்மை இருக்கிறது என்பது நோக்கத்தக்கதாகும்.

வைரமாய் மாறும் பனைமரமானது நீண்ட காலம் இந்த நிலைத்தினில் நிமிர்ந்தபடியே நிற்கிறது என்பதும் பெரு மையாய் இருக்கிறதல்லவா ! பனை இருந்தும் பயன் கொடுக்கிறது. அது இறந்தும் பயன் கொடுக்கிறது. இறந்தும் என்பது பனைமரம் தறிக்கப்பட்ட நிலையிலும் பயனைக் கொடுப்பதையே குறிப்பது எனலாம்.

நிமிர்ந்து நின்ற பனையானது வெட்டி நிலைத்திலே வீழ்த்தப்பட்ட பின்னர் அது விழுந்து கிடக்கும் காட்சி பெருவீர னொருவன் போர்களத்தே வீழ்ந்து கிடப்பதுேபாலவே இருக்கும். நிற்கும் நிலையிலு ஒரு கம்பீரம் ! வீழ்ந்து கிடக்கும் பொழுதும் ஒரு கம்பீரந்தான் ! அதுதான் பனையின் தனித் தன்மையாகும்.

பனைமரம் அதிக எடையினைக் கொண்டதாகும். அத்துடன் நீண்ட காலத்துக்கு நின்று பயனை நல்கிடவும் கூடியதுமாகும்.தூணாகி நிற்கிறது. கப்பற்றுறை மேடையினைக் கட்டுவதற்குக் கைகொடுத்து நிற்கிறது.நாம் வாழும் வீட்டின் கூரையாகவும் பனை பாதுகாப்பை வழங்கியும் நிற்கிறது. ஓட்டு வீடுகளின் கூரையிலும் பனைமரத்தின் தீராந்திகள், வளைகள், வரிச்சுகள் இடம் பெற்றிருப்பதையும் இன்றும் காணக் கூடியதாகவே இருக்கிறது. பனைத் தீராந்திகள் , வளைகள், வரிச்சுகள் , பல ஆலயத்தின் கூரைகளுக்கு ஆதாரமாக இருப்பதும் நோக்கத்தக்கதாகும். நூறு வருடங்கள் பழமையான வீடுகளை இன்றும் நாம் காணமுடிகிறது. அந்த வீடுகளின் கூரைகளில் பனை மரமே கம்பீரமாய் வரிச்சாகவும், வளையாகவும் ,தீராந்தியாகவும் இருப்பதைக் காணும் வேளை எம்மையறியாமலேயே எம்முள் ஒரு ஆச்சரிய உணர்வு மெலெழுகிறதல்லவா ! பழைமையாய் இருக்கும் அந்தத் தீராந்த்திகளைத் தொட்டு ப்பார்கையில் அவையத்தனையும் இரும்புபோல காத்திரமாகவே இருப்பது தெரியவரும்.

கூரை வேலைகள் செய்யும் பொழுது ஒரு வளையை இன்னொரு வளையுடன் பொருத்த வேண்டி வரும். நடுவில் போகும் வளையிலே பக்க வாட்டில் வருகின்ற மரங்களை இணைத்துப் போடவேண்டிய நிலையும் வரும். அப்படி இணைக்கும் பொழுது அந்த இணைப்புக்குக்காகப் பயன்படுத்தப்படும் ஆணி அதாவது ஆப்புக்கூட பனையினால் ஆகியதே என்பதும் கருத்திருத்த வேண்டியதே. பனையில் ஆப்பு இரும்பினாலாகிய ஆணிபோல வைரம் மிக்க தாகும் என்பது நோக்கத்தக்கதாகும். நூறுவருடங்கள் பழைமையான வீடுகளின் கூரையின் உறுதிக்கு பனை மரத் தின் ஆப்பும் ஒரு பக்கபலமாகவே இருக்கிறது என்பதும் நோக்கத்தக்கதாகும். இரும்பை யே பயன்படுத்தாமல் வீட்டின் கூரைகளை முழுக்க முழுக்க பனை மரத்தின் விட்டங்களாலும், தீராந்திகளாலும், பனைமரச் சட்டங்களா லும், அக்காலத்தில் வடிவ மைத்த எங்களின் முன்னோரின் மரத் தொழில் நுப்பத்தினை வியக்காமல் இருக்கவே முடியாது. அவர்க ளின் தொழில் நுடபத்துக்குக் கைகொடுத்து உதவிய பனைமரத்தையும் வியந்துதானே நாம் பார்க்க வேண்டி இருக்கிறது !

பரசுராமர் என்பவர் ராமாயணத்தில் வருகிறார். அவர் கையில் வைத்திருந்த ஆயுதமே கலப்பை அதாவது வயயில் உழுகின்ற ஏர் வடிவினதாகும். அந்தக் கலப்பையே பனை வைரத்தில் செய்யப்பட்டிருப்பதாய் அறிய முடிகின்றது. ராமயண காலத்திலேயே பனையின் வைரம் பொருட்களாக்குவதற்குப் பயன்பட்டு இருக்கிறது என்னும் செய்தி மனங்கொள்ளத்தக்கதேயாகும். பனையினைக் கொண்டு ஏணிகள் செய்யப்பட்டன. அப்படியான ஏணிகள் இன்றும் நடைமுறையில் பயன்படுத் தப்பட்டு வருவதைக் காணக்கூடியாதாகவே இருக்கிறது.விளையாட்டுப் பொருட்களும் பனைமரத்தின் வருகையாய் அமைகிறது. அத்துடன் உணவுத்தட்டுகள் , வலையல்கள், பென்சில்கள் என்றும் ஆக்கப்பட்டு வந்தன என்பதும் நோக் கத்தக்கதாகும்.

ஆடம்பரமான பெட்டிகள் செய்ய்யப்பட்டன.படுத்துகொண்டே ஆடும் வகையில் செய்யப்பட்ட நாற்காலிகளில் ஆடுகின்ற நிலைக்குரிய வளைவுகள் செய்யப்பட்டன. சுவாமியை வாகனங்களில் வைத்து வீதியுலா வருவதை நாமனைவரும் அறிவோம். வாகனத்துடன் இரண்டு பெரிய உருண்டையான மரத்தடிகள் கட்டப்பட்ட வாகனத்தைத் தூக்குபவர்கள் தங்கள் தோள்களில் சுமந்து வருவார்கள். அப்படி வரும்பொழுது இடையிடையே வாகனத்தை நிறுத்தி வைப்பார்கள். அந்த வேளை வாகனத்தில் தடிகளை த்தாங்குவதற்கு ஆதாரமாக ஒரு மரத்தடியினைப் பயன்படுத்துவார்கள். அந்த மரத்தடியும் பனைமரத்தின் வைரம் பாய்ந்த தடியேயாகும் என்பதும் நோக்கத்தக்கது.இப்படியாய் அமையும் அதனை " ஆயக்கால் " என்னும் பெயர் கொண்டு அழைக்கிறார்கள்.

இருசுக்கட்டை என்பது வண்டியின் பாகத்தைத் தாங்கி நிற்பதோடு அச்சை கோர்ப்பதற்கு உறுதுணையாக இருக் கிறது.வண்டியின் சக்கரங்களே இந்த அச்சில்த்தான் இணைக்கப்படுகிறது என்பதுதான் மிகவும் முக்கியமாகும். மாட்டு வண்டிகள்தான் எங்களின் போக்குவரத்தில் கைகொடுத்து நின்ற வாகனங்கள் எனலாம்.பயணம் செய்யும் மாட்டு வண்டிகளில் பயணிப்போர் அமர்ந்து செல்லுவதற்குரிய இடமானது கூடார அமைப்பினைக் கொண்டிருப் பதை நம்மில் பலர் அறிந்திருப்போம்.இப்படி அமைந்திருக்கும் வண்டி கூட்டு வண்டி என்று அழைக்கப்பட்டது. இவ் வண்டியினை - வில் வண்டி, பெட்டி வண்டி, சவாரி வண்டி என்றெல்லாம் அழைத்தனர். இந்த வண்டிகளில் பனை மரத்தின் பயன்பாடும் நிறையவே இருந்திருக்கிறது என்பதும் கருத்திருத்த வேண்டியதேயாகும்.கட்டை வண்டியின் முன்புறம் நுகத்தடி பூட்டுவார்க்குக் கீழ்ப் புறம் வண்டியானது தரையில் படாமல் வண்டியின் முனை தூக்கலாக இருப்பதற்கு பனை மரத்துண்டு பயனாக நின்றது. அப்படி அது அமைந்ததை ஏர்க்கால் என்று அழைத்தார்கள்.

உலக்கையாய் பயன் பட்டிருக்கிறது. வயதானவர்களுக்கு ஊன்று கோலாகவும் பயன் பட்டைருக்கிறது. தானியங்களை அதாவது - குரக்கன், பயறு, உழுந்து , என்பவற்றை மாவாக்க திரிகை என்னும் கல்லு பயன்படுத்தப் பட்டது. அந்தக் கல்லு வட்டவினதாய் மேலொன்றும் கீழொன்றுமாகவே இருக்கும். இரண்டு கல்லினை இணைப்பதற்கு நடுவில் அச்சாணியாகவும், மேல் கல்லினைச் சுற்றும் கைப்பிடியாகவும் பனைமரத்தின் குச்சியே பயன் படுத் தப்பட்டது என்பது நோக்கத்தக்கது. அரைக்கும் இயந்திரமாக அப்போது எமக்கிருந்தது இந்தத் திரிகைக்கல் லேயாகும்.

கிணற்றிலே நீரினை அள்ளுவதற்கு கிணற்றருகே துலா என்னும் ஒரு பொறிமுறை அமைப்பு அன்று இருந்தது. அதற்காகப் பனை மரத்துண்டுகள் கைகொடுத்து நின்றன. துலா , ஆடுகால் , என்னும் இரண்டு அமைப்புக்கும் ஆதாரமாய் பனை மரத்தின் துண்டுகளே இருந்தன என்பதும் நோக்கத்தக்கதாகும். மரக்க றித் தோட்டங்களில் நீரினைக் கிணற்றிலிருந்து வாய்க்கால்களுக்குப் பாய்ச்சுவதற்கும் பனையைப் பிளந்து அதனைச் சீராகச் செதுக்கி எடுத்து மரப்பீலியாகவும் அக்காலங்களில் பயன்படுத்தி இருக்கிறார்கள். இதனை இக்கால இளையோர் அறிய மாட்டார்கள். வயதுவந்தவர்களுக்கும் , கிராமத்தில் வசித்தவர்களுக்கும், இவையனைத்துமே நன்றாகவே தெரிந்து இருக்கும்.

படகுகளில் பயணம் செய்வது அன்று ஒரு பயண முறையாகவே இருந்திருக்கிறது.தரைவழிக்கு மாட்டு வண்டிகள் போல நீர் வழிக்கு சிறிய, பெரிய படகுகள், தோணிகள், கட்டுமரங்கள் , என்றெல்லாம் இருந்திருக்கிறது. படகுகளில் ஏறிடவும் பின் இறங்கவும் துறைகள் அமைக்கப்பட்டிருந்திருந்தன. அந்தத் துறைகளில் படகுகளில் இருந்து இறங்கு வார்களுக்கும், ஏறிச் செல்பவர்களுக்கு ஆதரமாகப் படகுத்துறை திட்ட மிட்டு அமைக்கப் பட்டிருந்தது. அவ்வாறு அமைக்கப்பட்ட அந்தத் துறையின் ஆணிவேராக அமைந்திருந்தது வைரம் பாய்ந்த பனைமரத் துண்டுகளேயாகும். பனைமரத்தினை இரண்டாக வெட்டி துறையின் நீள அகலங்களுக்கு ஏற்றவாறு நீரில் நடுவார்கள். அதன் மேல்தான் பலகைகள் பரவப்பட்டு துறைமுகம் ஏற்படுத்தப்படுகிறது. படகுளில் இருந்து இறக்கப்படும் பொருட்கள் அனைத் தையுமே எடுத்துச் செல்லும் பாரமான வண்டிகள் அத்தனையயும் தாங்கி மக்களின் பாதுகாப்பான பயணத்துக்கு உற்ற துணையாக நீரின் அடியில் அமைதியாய் பணிசெய்து நிற்பது எங்கள் வைரம் பாய்ந்த பனை மரத்துண்டு களே என்பதை யாவரும் மனமிருத்துவது அவசியமாகும். நவீனங்கள் பல நுழைந்திட்ட வேளையிலும் இன்றும் பல படகுத் துறைகளைப் பனை மரங்களைத் தாங்கி நிற்கின்றன என்பதை மறுத்துவிடவே முடியாத உண்மை யாகும். சிறியவகை ஓடங்களைச் செய்வதற்கும் பனைமரத்தின் வைரத்தினாலாகிய பலகைகள் பயன் படுத்தப்பட்டிரு க்கின்றன. பனைமரத்தின் வைரம் எப்படியெல்லாம் அமைகிறது என்பதைப் பல நிலைகளில் பார்த்தோம். இப்போது இங்கே பாட்டிலே பார்ப்போம். பாட்டு என்றாலே சுவைதானே !

இனைப்புகள் அசையாமல் இறுக்கமாய் இருந்திடவே
அடப்பக்கட்டை, ஆப்பிசக்கை, அனைத்துமே நானாவேன்
என்னை இழைத்தாலும் அலங்காரப் பொருளாவேன்
ஆடம்பரப் பெட்டிகளையும் அழகாக நான்தருவேன்
அனைவரும் மகிழ்ந்திடவே ஆடும் நாற்காலி நானாவேன்
பொதிசுமக்கும் மனிதர்கள் இளைப்பாற ஆயக்கால்
நானாவேன்
வண்டிச் சக்கரத்தை வாகாக இணைத்திடவே
ஆராக்கால் நல்வட்டை அனைத்துமே நானாவேன்
பஞ்சாற்றைக் கசியவைக்கும் இடுக்கியும் நானாவேன்
ஆரக்கட்டையை இணைக்கும் இருசுக்கட்டையும் நானாவேன்
வீடுகளில் தூண்தாங்கும் உத்திரமும் நானாவேன்
வயதாகிக் கூன்விழுந்த வயோதிகப் பெரியோர்க்கு
ஊன்று கோல் கைத்தடி கைப்பிடியும் நானாவேன்
நிலத்திலே உழுகின்ற மாடுகளை இணைப்பதற்கு
நிகரில்லா ஏர்க்காலும் நுகத்தடியும் நானாவேன்
ஓடையைக் கடப்பதற்கு ஒப்பரிய கட்டுமரம்
நல்லோடம் அகல்படகு நானாவேன் நீயறிவாய்
படகுகள் மோதினால் பாழாகும் என்றறிந்து
அழிவதனைத் தடுத்திடவே ஏராவும் நானாவேன்
உருளும் வண்டிக்குக் கடையாணி நானாவேன்
ஒதுங்கும் மாட்டிற்குக் கடைமுளை நானாவேன்
களைப்பாறும் கட்டிலதைச் செய்திடவே பொருளாவேன்
மரங்கொண்டு செய்யுமொரு கட்டைவண்டி நானாவேன்
வீட்டிலுள்ள வாயிலுக்குத் திறந்தடைக்கக் கதவாவேன்
கோவிலிலே இருக்கின்ர கலசங்கள் காப்பாகும்
கலசங்கள் வைத்திடவே கசமரம் நானாவேன்
நீரிறைக்கும் கவலையிலே கயிறுருளும் உருளையாவேன்
குடைகளைப் பிடித்திடவே கைப்பிடியும் நானாவேன்
மாடிழுக்கும் வண்டிதனை ஓட்டுகின்ற மனிதருக்குத்
தாங்குசட்டம் கொலுப்பலகை எல்லாமும் நான்தருவேன்
அளவதனைக் குறித்து நிற்கும் குற்றிக்குச்சி நானாவேன்
மகிழ்ச்சியுடன் மக்களெலாம் பயணங்கள் செய்திடவே
கூட்டுவண்டி வில்வண்டி பெட்டிவண்டி நானாவேன்
கூரைவீடுகளில் இணைக்கின்ற வைரமும் நானாவேன்
என்னையே பிளந்தாலும் கோடாலிக்குக் காம்பாவேன்
தேர்ச்சப்பரத்தில் பொருத்துகின்ற சகடையும் நானாவேன்
வீடுகட்டத் துணைபுரியும் சக்கையுடன் சட்டங்கள்
சலாகைகள் சன்னமரம் சிராயும் நானாவேன்
ஊடிழைய இணைக்கின்ற தறிநாடா நானாவேன்
சுடச்சுடவே கூழ்சமைக்க நெட்டையான துடுப்பாவேன்
சரியாக எடைபோடத் துலாக்கோலும் நானாவேன்
சிறுகுழந்தை உறங்கிடவே தூளிக்கும் கவையாவேன்
பொருள்களை நிறுப்பதற்குத் தெறாக்கத்தடி நானாவேன்
தேர் ஓட்ட சப்பரமும் சக்கரமும் நானாவேன்
நடுங்கி நடப்பவர்களுக்கு நடைக்குச்சி நானாவேன்
தத்தித் தவழும் குழந்தைக்கு நடைவண்டி நானாவேன்
வரவேற்பு அறையினிலே நாற்காலி மேசையுமாவேன்
அலங்காரப் படகுகளில் நீரணிமாடம் நானாவேன்
என்னைப் படைத்த இறைவனைச் சுமக்கும்
பல்லக்கும் பிள்ளைத்தண்டும் பீடமும் நானாவேன்
வீட்டை அழகுபடுத்தும் பறனையும் ( மச்சு ) நானாவேன்
மாடுகளுக்குத் தண்ணிகாட்டப் பனங்கொட்டும் (தொட்டி)
நானாவேன் கட்டும் கூரைகளுக்கு மங்கை நானாவேன்
அலங்காரப் பூஜை அறையில் பூஜைமண்டபம் நானாவேன்
கைவினைப் பொருள் செய்ய மூலப்பொருள் நானாவேன்
ஒளிப்படத்தை ஒழுங்குறுத்த போட்டோ சட்டம் நானாவேன்
மரச்சட்டம் இணைத்திடும் மர ஆணி நானாவேன்
மர ஆணி அடித்திறக்க மரச்சுத்தியும் நானாவேன்
வேளாண்மை வளம்பெற மரக்கலப்பை நானாவேன்
தம்பணியில் தச்சர்கள் அடையாளம் இடுவதற்குத்
தரமான பரக்குத்தி தந்துநான் மகிழ்ந்திருப்பேன்
மீன்பிடிக்கும் மீனவர்க்கு மரத்தக்கை நானாவேன்
மாட்டுவண்டி ஓட்டுபவர்க்கு வண்டிப்பார் நானாவேன்
ஓடுந்தேர் நிறுத்தவும் திசைமாற்றி இயக்கவும்
போடுகின்ற பிரேக்காக முட்டுக்கட்டை நானாவேன்
பொருளதிகம் ஏற்றுதற்கு வண்டிகளில் வாய்ப்பாக
முழுக்குச்சி வண்டித்தட்டி எல்லாமும் நானாவேன்
அவ்வண்டி அடிப்பாகம் பொருத்துகின்ற துலாவாவேன்
நிலந்தாங்கு உழுவோர்க்கு மோழியும் நானாவேன்
கணக்கெழுதும் கணக்கருக்கு ஷூல்தடியும் நானாவேன்
குடியிருக்கும் வீடுகட்ட வேண்டுகின்ற நல்வளவும்
வளைகளுடன் நீள்வாரையும் நாந்தருவேன் நீயறிவாய்
நிலத்திற்கு நீர்ப்பாய்ச்ச வாய்க்காலாய் நான்கிடப்பேன்
விளையாடும் சிறார்கட்கு விளையாட்டு மட்டையாவேன்
வீட்டுக்கூரை அமைத்திடவே வேண்டும்பொருள் நாந்தருவேன்வீட்டுத்துலா ஜன்னலெல்லாம் விருப்பமுடன் நாந்தருவேன் வெப்பமெலாம் தடுத்திடவும் பயிர்காத்து வளர்த்திடவும் வயல்களுக்கு வேலியாக வாகாக அமைந்திடுவேன்

பனையில் காணப்படுகின்ற வைரமான பகுதிகள் இவ்வாறு பல வகைகளில் பயனாகி நிற்கிறது. பனையின் வெளிப்பக்கந்தான் நல்ல வைரமாய் இருக்கும். ஆனால் அதன் உட்பகுதியே மென்மையாக இருக்கும். இப்பகுதியை சோற்றுப் பகுதி அல்லது சோத்தி என்றும் பெயரிட்டு அழைக்கிறார்கள். இந்தச் சோத்திப் பகுதியும் பயனை அளித்தே நிற்கிறது என்பதும் நோக்கத்தக்கதாகும். இந்தச் சோத்திப் பகுதியினைப் பயன்படுத்தி " சிப் போட் " செய்யலாம் என்னும் செய்தியும் கருத்திருத்த வேண்டியதாகும். மின்சாரத்தையோ , வெப்பத்தையோ கடத்தாது பாது காக்கும் தன்மை வாய்ந்ததாக இருக்கிறதாம் என்றும் அறிந்திட முடிகிறது.சோத்திப் பகுதியின் துகள்களும் பயனாகி நிற்கின்றன. அதாவது போத்தல்களுக்குள் அடைக்கப்படும் பொருட்கள் பாதுகாப்பாக இருப்பதற்கான மூடிகள் இதனால் செய்யப்படுகின்றன என்பது நோக்கத்தக்கது.இந்த சோத்துப் பகுதியினை மலைச்சாதி வகுப்பினர் தங்களின் உணவாகவும் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்று அறியக்கூடியதாகவும் இருக்கிறது. மனிதர்களுக்கு மட்டுமன்றி விலங்குகளின் உணவாகாகவும் ஆகியிருக்கிறது சோத்துப்பகுதி.இந்தச் சோத்துப்பகுதி இவ்வாறு பயன்பட்ட நிலையில் அது எரி பொருளாகவும் மாறித் தன்னையே தியாகம் செய்து உதவியும் நிற்கிறது என்பதும் நோக்கத்தக்கதாகும். இந்தச் சோத்தியைக் காயவிட்டால் அது சிறந்த எரிபொருளாகவும் மாறுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir

# போதைப் பொருள் குறித்த ஐ.நா.ஆணைக்குழுவின் 67 ஆவது கூட்டத்தில் 'யுக்திய' குறித்துக் கரிசனை

## வெளியிட்டார் அம்பிகா சற்குணநாதன்



இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் 'யுக்திய' போதைப்பொருள் ஒழிப்பு செயற்திட்டம் மற்றும் பொலிஸாரின் பணிகள் இராணுவமயப்படுத்தப்படல் ஆகியவற்றின் எதிர்மறை விளைவுகள் குறித்து போதைப்பொருள் தொடர்பான ஐக்கிய நாடுகள் ஆணைக்குழுவின் 67 ஆவது கூட்டத்தில் சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டோருக்கான ஐக்கிய நாடுகள் நிதியத்தின் உறுப்பினரும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளருமான சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 55 ஆவது கூட்டத்தொடரின் பக்க நிகழ்வாக நடைபெற்ற போதைப்பொருள் தொடர்பான ஐக்கிய நாடுகள் ஆணைக்குழுவின் 67 ஆவது கூட்டத்தில் 'போதைப்பொருளுக்கு எதிரான போர் இம்மனித உரிமைகள்சார் சவாலைக் கையாள்வதற்கான இராணுவமயமாக்கல் மற்றும் அவசரகாலநிலை அணுகுமுறைகள்' எனும் தலைப்பின்கீழ் உரையாற்றுகையிலேயே அம்பிகா சற்குணநாதன் மேற்கண்ட விடயங்கள் தொடர்பில் கருத்து வெளியிட்டார்.

குறிப்பாக அண்மைய காலங்களில் உலகளாவிய ரீதியில் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் மற்றும் போதைப்பொருளுக்கு எதிரான போர் ஆகிய இரண்டும் ஒன்றாக இணைக்கப்பட்டிருப்பதாகவும், அதற்கமைய இலங்கையிலும் இவ்விரு விடயங்களும் இணைந்த வடிவத்திலேயே நோக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் நீட்சியாக அதிகரித்த இராணுவமயமாக்கல் மற்றும் அதன் விளைவாக மனித உரிமைகள்மீது ஏற்பட்டிருக்கும் தாக்கங்கள் குறித்துப் பிரஸ்தாபித்த அவர், இலங்கையில் அதிகரித்துவரும் பொலிஸாரின் பணிகள் இராணுவமயப்படுத்தப்படல் அல்லது இராணுவத்தினரால் பொலிஸாரின் பணிகள் மேற்கொள்ளப்படல் போக்கு தொடர்பில் விளக்கமளித்தார்.

குறிப்பாக இலங்கையில் 'யுக்திய' எனப்படும் போதைப்பொருள் ஒழிப்பு செயற்திட்டம் கடந்த 3 மாதங்களாக முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும், இதன்கீழ் கடந்த 17 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 72,850 பேர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர் எனவும், 2322 பேர் கட்டாய போதைப்பொருள் மீட்சி சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டிய அம்பிகா சற்குணநாதன், இருப்பினும் இம்மூன்று மாதகாலப்பகுதியில் வெறுமனே 29.4 கிலோகிராம் உள்ளிட்ட சொற்பளவான போதைப்பொருள்களே கைப்பற்றப்பட்டிருக்கின்றன எனத் தெரிவித்தார்.

எனவே, இங்கு போதைப்பொருளைப் பயன்படுத்துபவர்களும், சிறியளவில் அவற்றை விற்பனை செய்பவர்களுமே கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும், மாறாக பாரியளவு போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவோர் கைதுசெய்யப்படவில்லை எனவும் குறிப்பிட்ட அவர், அவர்கள் அனுபவித்துவரும் பாதுகாப்பு தொடர்பிலும் கரிசனை வெளியிட்டார். (05)

## பாடசாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள்கல்விநடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு முன்னர் காலை 7.30 மணிக்கும் 8.30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் இந்தக்காலை உணவை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

'ஆரோக்கியமான சுறுசுறுப்பான தலைமுறை' என்ற கருப்பொருளின் கீழ், 2024 ஆம் ஆண்டிற்கான பாடசாலை உணவுத் திட்டம், பாடசாலை மாணவர்களிடையே போசாக்குப் பிரச்சினைகளைக் குறைத்தல், மாணவர்களின் தினசரி பாடசாலை வருகையை அதிகரித்தல், நல்ல உணவுப் பழக்கம் மற்றும் சுகாதாரப் பழக்கங்களை மேம்படுத்துதல், கல்வி மேம்பாட்டு மட்டத்தை நோக்கமாகக்கொண்டுள்ளதுடன்இது உள்நாட்டு உணவு கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்கான அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதிமேலும்தெரிவித்ததாவது:

பாடசாலை உணவுத் திட்டம் இன்று ஆரம்பிக்கப்படுகிறது. அரசாங்கத்தின் எதிர்பார்ப்புகளில் ஒன்றை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பாக இந்த சந்தர்ப்பத்தை நான் பார்க்கிறேன். கல்விச் செயற்பாடு பூரணமடைவதற்கு, மாணவர்களுக்கு பாட அறிவை வழங்கி, பரீட்சைக்குத் தயார்ப்பதைப் போன்றே அவர்களின் போசாக்கையும் பாதுகாக்க வேண்டும். உலகில் பல நாடுகள் இந்தபாடசாலைஉணவுதிட்டத்தை செயல்படுத்தி வருகின்றன.

நமது நாட்டில் போசாக்குக் குறைபாடு பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது.'அஸ்வெசும'திட்டத்தின் மூலம்குறைந்தவருமானம்பெறும் மக்களுக்கு வழங்கப்படும் நிதி நிவாரணத்தை மூன்று மடங்காக உயர்த்தியுள்ளோம்.

பாடசாலைமாணவர்களிடையே போசாக்குக்குறைபாடுஅதிகரிப்பதற்கு வருமான அளவு மட்டும் காரணம் அல்ல. சில மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதற்காக காலை 6.00 மணியளவில் வீட்டை விட்டு வெளியில் வருகிறார்கள். இதனால் அவர்களுக்கு காலை உணவு சாப்பிட முடிவதில்லை.

மேலும் பகலுணவையும் சாப்பிட முடிவதில்லை. எனவே எந்த அந்தஸ்த்தை கொண்டிருந்தாலும்,எந்த இனத்தை அல்லது மதத்தை சேர்ந்தவராக இருந்தாலும் சகலமாணவர்களும்இந்தசிக்கலை எதிர்கொள்கின்றனர். எனவே, மாணவர்களுக்கு பாடசாலையில் உணவு கிடைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவது மிகவும் அவசியம்.

9134 அரச பாடாசலைகளிலும், 100க்கும் குறைவான மாணவர் களைக் கொண்ட அனைத்துப் பாடசாலைகளிலும் ஆரம்ப வகுப்புகளில் உள்ள அனைத்து மாணவர்களையும் உள்ளடக்கிய இந்த பாடசாலை உணவு வழங்கல் திட்டத்தின் மூலம் 1.6 மில்லியன் மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக ஒன்பது மாகாண சபைகளுக்கு ஆளும் தரப்பால் நேரடியாக 16,600 மில்லியன் ரூபா நிதி வழங்கப்படுகிறது. உலக உணவுத் திட்டம் மற்றும் அமெரிக்காவின் விவசாயத் திணைக்களம் (USDA) உட்பட ஏனைய அமைப்புகளும் அனுசரணை வழங்குகின்றன.

இந்த போசாக்குத் திட்டத்திற்கு தேவையான உணவு வகைகள், முக்கிய உள்நாட்டு விநியோகஸ்தர்களிடமிருந்து பெறப்படுகின்றன. நேரடி மற்றும் மறைமுகமான புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதன் ஊடாக நாட்டின் உற்பத்தி பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான பங்களிப்பாகவும் உள்ளது.

இந்தப் பாடசாலை உணவுத் திட்டம் தொடர்பான அனைத்து நிதி நிர்வாகங்களையும் வெளிப்படைத்தன்மையுடனும் அறிக்கைகளுடனும் முன்னெனெடுப்பதற்கான பொறிமுறையும் நடைமுறையில்உள்ளது. கொள்கை வகுக்கப்பட்டது முதல் அதன் அனைத்து முக்கிய நிர்வாக மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை கல்விஅமைச்சின்சுகாதாரம்மற்றும் போசாக்கு பிரிவு மேற்கொள்கின்றது.

தற்போது நாட்டில் நவீன கல்வி முறையை உருவாக்குவதற்கு நாங்கள்முயற்சிசெய்துவருகிறோம். 2024ஆம்ஆண்டுக்குமாத்திரமன்றி 2030 ஆம் ஆண்டுக்கும் உகந்த கல்வி முறையை உருவாக்க வேண்டும். நதப் பணிகளை இப்போது செய்து வருகிறோம். ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல், நவீன தொழில்நுட்ப அறிவை வழங்குதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், ஒவ்வொரு பாடசாலையிலும்செயற்கை நுண்ணறிவு திட்டத்தை செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம். முதலில்பாடசாலைகளில் செயற்கைநுண்ணறிவுச்சங்கங்கள் தொடங்கப்படவேண்டும். மேலும், தேசிய ஏஐ மையம் சட்டப்படி நிறுவப்பட உள்ளது. இந்த ஆராய்ச்சி மற்றும்கல்விநடவடிக்கைகளுக்காக ஆளும் தரப்பு ஆயிரம் மில்லியன் ரூபாவைஒதுக்கியுள்ளதுஎன்பதைக் கூற வேண்டும்.

அதன்படி, அடுத்த சில ஆண்டுகளில், செயற்கை நுண்ணறிவுத் திட்டத்தை ஆரம்பப் பாடசாலைகள் மட்டுமின்றி, உயர் கல்வி கற்பிக்கப்படும் அனைத்துப் பாடசாலைகளிலும் அறிமுகப்படுத்த உள்ளது.

நவீன தொழில்நுட்பத்துடன் நாம் முன்னேற வேண்டும். அந்த தொழில்நுட்ப அறிவை பிள்ளைகளுக்குகொடுக்கவேண்டும். அதன்படி, பாடசாலைக்கல்விமற்றும் பரீட்சைமுறையைமாற்றியமைப்பது குறித்துகவனம்செலுத்தியுள்ளோம். இந்தநவீனதொழில்நுட்பஅறிவோடு பிள்ளைகளின் ஆங்கில மொழி அறிவையும் வளர்க்க வேண்டும். அதற்கான திட்டங்களையும் வகுத்துள்ளோம்என்றும்ஜனாதிபதி இங்கு தெரிவித்தார்.

நிகழ்வில் உரையாற்றிய கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம்ஜயந்த் தெரிவித்ததாவது:

பின்தங்கிய பிரதேசங்களில் உள்ளபாடசாலைமாணவர்களுக்கு இந்த உணவுத் திட்டம் முன்பு செயல்படுத்தப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு முதல் முதலாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு போசாக்குள்ள உணவு வழங்கும் திட்டம் தொடங்கப்படும்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நிதியமைச்சராக 16,600 மில்லியன் ரூபாவை இதற்காக ஒதுக்கியுள்ளார். மேலும், ஐக்கிய நாடுகளின் உணவுத் திட்டம் மூலமாகவும் உதவி பெறப்படுகிறது. அதன்படி, 17 இலட்சம் ஆரம்பவகுப்பு மாணவர்களுக்கும் காலையில் போசாக்குள்ள உணவு வழங்குவது சாத்தியமாகியுள்ளது.

பரிந்துரைக்கப்பட்ட தரத்தில் போசாக்குள்ள உணவு வழங்க சம்பந்தப்பட்ட துறைகளுக்கு ஏற்கனவே அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

கல்விகற்பிப்பதற்கு முன்னர் அனைத்து மாணவர்களின் வயிற்றையும் நிரப்புவதன் மூலம், சிறப்பாக கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்பைப் பெறுகிறார்கள், இது மாணவர்களின் மன நிலையை சீர்செய்யவும் உதவுகிறது.

கடந்த மாதம் பாடசாலை மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டன. மேலும்சீருடைகள் சரியான நேரத்தில் வழங்கப்பட்டன. இன்றுமுதல்போசாக்குள்ளஉணவு வழங்கப்படும். னால் இதற்கு ஊடகங்கள்மூலம்கிடைத்தபிரசாரம் மிகவும் குறைவு. த்திரிகைகளில் போசாக்கு குறைபாடு பற்றிய செய்திகளைபெரியஎழுத்தில்வெளியிடும் ஊடக நிறுவனங்களும் இந்த போசாக்குள்ள உணவு வழங்கல் திட்டம் தொடர்பில் மக்களுக்கு தெரிவிக்கும் என நம்புகிறேன் - என்றார்.

## எந்தத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீதான அத்துமீறல் மட்டுமே. புதிய திருத்தங்கள் மூலம், பாலினத்தைப் பொருட்படுத்தாமல் சட்டத்தைப் நிறைவேற்ற முடியும்.

இங்கு, சட்டப்பூர்வமாகப் பிரிந்த மனைவிக்கு கணவன் செய்யும் பாலியல் வன்முறைளும் வன்புணர்வாகக் கருதப்படுகிறது. பொலிஸ் காவலில், சிறை அல்லது வேறு ஒருவரின் காவலில் இருக்கும் போது மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்களுக்காக வழங்கப்படும்தண்டனையை அதிகரிக்கவும் முன்மொ ழியப்பட்டுள்ளது.

மேலும், இளவயதினர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டால் பத்து ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சட்டத் திருத்தங்கள் அனைத்தும் சிரேஷ்ட சட்டத்தரணிகள் குழு சுமார் நான்கு ஆண்டுகளாக நடத்திய ஆய்வின் பின்னரே முன்வைக்கப்பட்டுள்ளன. இதற்கு பல்வேறுசமூகஆர்வலர்கள்எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றனர். இந்தசட்டத் திருத்த முன்மொழிவுகளை எதிர்த்து சில தரப்பினர் உயர் நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்தனர்.

இது தவிர தேர்தல் சட்டத் திருத்த முன்மொழிவுகளும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன.1994 இல் திருமதி சந்திரிக்காகுமாரணதுங்கஜனாதிபதி வேட்பாளராக மூன்று தேர்தல் வாக்குறுதிகளை வழங்கினார். அது நிறைவேற்றதிகாரம் உடைய ஜனாதிபதி முறைமையைஒழிப்பது, ஊழலைக் கட்டுப்படுத்துவது மற்றும் விகிதாசார வாக்களிப்பு முறையை நீக்குவது. ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கு பொறுப்பான உறுப்பினர்களைதெரிவுசெய்யவும் அதில்பரிந்துரைசெய்யப்பட்டிருந்தது. இருப்பினும் அதன் பின்னரும் அரசமைப்பு பல தடவைகள் திருத்தப்பட்ட போதிலும், தேர்தல் முறைமையை மாற்றுவதற்கு எவ்வித திருத்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

19ஆவது அரசமைப்புத்திருத்தம் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்தது. அதுவரை, ஜனாதிபதி ஒரு கொலை செய்திருந்தாலும், அவர் மீது வழக்குத் தொடர முடியாமல் இருந்தது. ஆனால் 19 ஆவது திருத்தம் அந்த நிலையை மாற்றியது. அதன்படி இதுவரை நான்கு ஜனாதிபதிகளுக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேலும், ஊழலைத் தடுக்க சட்ட அதிகாரம் கொண்ட ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி முதல் கீழ்நிலை அதிகாரி வரை சொத்துக்கள்மற்றும்பொறுப்புகளை கண்காணிக்கும் அதிகாரம் இந்த ஆணைக்குழுவுக்கு உள்ளது. இந்த ஆணைக்குழு தொடர்பான பல திருத்தங்கள் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஊழல் கண்காணிப்பு ஆணைக்குழுவை ஒரு சுதந்திரமான நிறுவனமாக மாற்றுவதற்குத் தேவையான சட்டத்தை இயற்றுவதே இதன் நோக்கமாகும்.

1994 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதித் தேர்தலின் போது ஒவ்வொரு தலைவர்களும் இது தொடர்பாக வாக்குறுதிகளை அளித்துள்ளனர். ஆனால் அந்த வாக்குறுதிகளை அந்த தலைவர்கள் யாரும் நிறைவேற்றவில்லை. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கீழ் இந்த ஆண்டு விகிதாசார தேர்தல் முறை மற்றும் ஊழலைக்கட்டுப்படுத்தும்வகையில் திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளின் தேர்தல் முறைகளில், தாழ்த்தப்பட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தொகுதி முறையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொகுதிக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் செனட் சபை முறைமை நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்றும் நான் கருதுகிறேன்.

நாடாளுமன்றத் தேர்தலில் திறமையானவர்களைக் காட்டிலும் பிரபலமானவர்கள்தான் அதிகமாக நாடாளுமன்றத்துக்கு வருவார்கள். ஆனால் செனட் சபை முறையின் ஊடாக பிரபலமில்லாத திறமையானவர்களும் நாடாளுமன்றத்தில் உறுப்பினராகலாம் - என்றார்.

இதுவரையில்முன்வைக்கப்பட்ட தேர்தல் திருத்தங்கள் மூலம் தேர்தலை ஒத்திவைக்கும் திட்டம் இருப்பதாக சமூகத்தில் சில பேச்சுக்கள் எழுந்துள்ளன. ஆனால் இந்தத் திருத்தங்கள் மூலம் தேர்தலை ஒத்திவைக்க எதிர்பார்க்கப்படவில்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில் இரண்டு தேர்தல்கள் நடைபெறவுள்ளன. அதன் போது எந்தவொரு வேட்பாளரும் இந்த தேர்தல் திருத்தம் குறித்து தங்கள் கருத்தை தெரிவிக்கலாம். பொதுமக்களுக்கும் இது தொடர்பாக தமது முடிவை எடுக்க முடியும்- என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள்மற்றும்அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

## தேவாலயங்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தர விடப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் வரும் பக்தர்களையும் அவர்களது பயணப்பொதிகளையும் முற்றாகச் சோதிக்குமாறு பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உத்தரவிட்டுள்ளார்.

அனைத்துப் பொலிஸ் பிரிவுகளுக்கும்பொறுப்பானசிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கும் இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, சமூக பொலிஸ் குழுக்கள், அந்தந்த தேவாலயங்களின் பாதிரிமார்கள் மற்றும் அமைப்பாளர்களுடன் இணைந்து வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# தேசிய இளைஞர் சேவைகள் மன்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வு தென்கிழக்கு பல்கலையில்





(எஸ்.அஷ்ரப்கான்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சாய்ந்தமருது பயிற்சி நிலையத்தில் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதல்கள் வழங்கும் நிகழ்வு இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர் எச்.யூ. சுசந்தவின் நெறிப்படுத்தலில் ஞாயிற்றுக்கிழமை தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுப்வியல் பீட கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நிகழ்வுக்கு இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர் பசின்டு குணரத்ன, தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் மற்றும் அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்கிரம ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்துகொண்டனர்.

இவர்களுடன் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனிபா, அம்பாறை சிறைச்சாலை அத்தியட்சகர் ஜெ.எச்.எம்.என். ஜெயபத்மா, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர்களில் ஒருவரான சமிக்க அமரசிங்க, இளைஞர் சேவைகள் மன்றத்தின் அம்பாறை பிராந்திய பிரதிப்பணிப்பாளர் கங்கா சகரிக்க தமயந்தி, கிழக்கு மாகாண பிரதிப்பணிப்பாளர் மஜீட், இளைஞர் சேவைகள் மன்றத்தின் சாய்ந்தமருது பயிற்சி நிலையத்தின் பொறுப்பாளரும் பிரதிப்பணிப்பாளருமான ஏ.ஹமீர் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின்போது தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கிலம் சிங்களம் உள்ளிட்ட கற்கைநெறிகளை பூர்த்திசெய்த 300 மாணவர்கள் தாங்களுக்கான சான்றிதல்களைப் பெற்றுக்கொண்டனர்.

நிகழ்வில் மாணவர்களுடன் அவர்களது பெற்றோரும் கலந்து கொண்டனர்.

(05)

# தமிழர்களின் கலையும் கலாசாரமும்' கிழக்கு பல்கலையில் ஆய்வு மாநாடு

இலங்கைக் கிழக்குப் பல்கலைக்கழகமானது வவுனியா பல்கலைக்கழகம், ஆசிய மற்றும் தென்னாசியப் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றோடு இணைந்து 'தமிழர்களின் கலை மற்றும் கலாசாரம்' என்ற தலைப்பில் சர்வதேச ஆய்வு மாநாடொன்றை எதிர்வரும் ஜூன் மாதம் 13, 14, 15 ஆம் திகதிகளில் கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகத்தில் மிக விமரிசையாக நடத்தவுள்ளது. இந்த ஆய்வு மாநாட்டை கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் ஒத்துழைப்போடு தமிழ் கற்கைகள் துறை ஏற்பாடு செய்யவுள்ளது.

இந்த மாநாட்டின் இணைத் தலைமைகளாக கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம், வவுனியா பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் த. மங்களேஸ்வரன் செயற்படுகின்றனர்.

மாநாட்டின் சர்வதேச ஒருங்கிணைப்பாளராக பாண்டிச்சேரி பல்கலைக்கழக பேராசிரியர் பஞ். இராமலிங்கம் இணைப்பாளராக கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் கற்கைகள் துறைத் தலைவர் பேராசிரியர் சி. சந்திரசேகரம் செயலாளராக தமிழ் கற்கைகள் துறை சிரேஸ்ட விரிவுரையாளர் திருமதி விஜிதா திவாகரன் செயற்படுகின்றனர்.

மாநாட்டுக் குழுவில் கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட பீடாதிபதி கலாநிதி வ. குணபாலசிங்கம், வவுனியா பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் எஸ்.எஸ். சுதாகரன், பாண்டிச்சேரி பல்கலைக்கழக பேராசிரியர் எம். கருணாநிதி, மொறிசியஸ் பல்கலைக்கழக பேராசிரியர் ராஜன் நரசிங்கன் அம்பிராஜன், றியூனியன் பல்கலைக்கழக பேராசிரியர் யோகாச்சாரி நீலமேகம், சென்னை வேல்ஸ் பல்கலைக்கழக பேராசிரியர் மகாலிங்கம் ஆகியோர் பணியாற்றுகின்றனர். ஆதார சுருதி உரைகளை வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ், தமிழக பேராசிரியர்கள் சிலரும் ஆற்றவுள்ளனர்.

இந்த மாநாட்டில் ஆசிய, தென்னாசிய நாடுகளைச் சேர்ந்த பல பல்கலைக் கழகங்களையும் உயர் கல்லூரிகளையும் சேர்ந்த அதிகமான புலமையாளர்கள் நேரடியாகப் பங்குபற்றவுள்ளமை சிறப்பம்சமாகும்.

மூன்று நாள்கள் நடைபெறவுள்ள மாநாட்டில் முதல் நாள் ஆரம்ப நிகழ்வுகளோடு தமிழர்களின் பாரம்பரிய கலை பண்பாட்டு மரபுகளை வெளிப்படுத்தும் பல கலை நிகழ்வுகள் நிகழ்த்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இரண்டாம் நாள் ஆய்வரங்குகள் நிகழ்த்தப்படும்.

ஆய்வரங்கின் உப கருப்பொருள்களாக வரலாறு மற்றும் பண்பாட்டுப் பாரம்பரியங்கள், மொழியும் இலக்கியமும், பாரம்பரிய தொடர்பாடல் முறைகள், பாரம்பரிய கல்வி முறைமைகள், பாரம்பரிய தொழில் முறைமைகளும் சமுதாயமும், கலைகளும் கைவினைப் பொருள்களும், பாரம்பரிய உடைகள், விளையாட்டுக்கள், உணவுகளும் சமையல் மரபுகளும், விழாக்களும் சடங்குகளும், தமிழர்களின் கலை கலாசார மரபுகளில் உலகமயமாக்கத்தின் தாக்கம் ஆகியன அமையும்.

ஆய்வு மாநாட்டைச் சிறப்புற நடத்துவதற்கு உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வாளர்களதும் ஆர்வலர்களதும் ஒத்துழைப்பு பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது. முக்கியமாக புதிய சிந்தனைகளோடும் முறையியல்களோடும் கூடிய நுணுக்கமான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

கட்டுரைகள் தமிழிலோ ஆங்கிலத்திலோ எழுதப்படலாம். கட்டுரைகள் அமையவேண்டிய முறைமைகள் மற்றும் ஏனைய மேலதிக விவரங்களை கிழக்குப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் பார்வையிட முடியும்.

(05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்




இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



# புத்துயிர் பெறப் போகின்றது கொலன்னாவை தொழிற்சாலை

## அமைச்சர் பிரசன்ன அறிவுறுத்து



கொலன்னாவை அரச தொழிற்சாலைத் திணைக்களம் புத்துயிர் பெறப்போகிறது. அதற்கான திட்டமிடப்பட்ட வேலைத்திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்காக, அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ் சத்தியானந்த கடந்த வெள்ளிக்கிழமை கொலன்னாவை அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்திற்கு கண்காணிப்புச் சுற்றுலாவில் இணைந்துகொண்டார்.

புதிய தொழில்நுட்பத்துடன் போட்டி சந்தையை உருவாக்குவதற்கான திட்டங்களை வகுப்பதே இந்தக் கண்காணிப்பு பயணத்தின் நோக்கமாக இருந்தது.

அங்கு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் ஒன்று கூடி அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தின் ஒவ்வொரு பிரிவிற்கும் சென்று பல குழுக்களாக அவதானித்து ஒவ்வொரு துறையின் தற்போதைய நிலைமை மற்றும் சாதகமான முன்மொழிவுகளை ஆய்வு செய்தனர்.

அதன்படி, கண்காணிப்புச் சுற்றுப்பயணத்தின் ஆய்வுக்குப் பிறகு, அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்திற்கான சந்தைப்படுத்தல் திட்டம் மற்றும் வருடாந்த திட்டத்தை விரைவில் தயாரிக்குமாறு அமைச்சின் செயலாளர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்தத் திட்டத்தை உடனடியாக அமைச்சுக்கு சமர்ப்பிக்குமாறு அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் ஆனந்த விஜேசிங்கவிற்கு அமைச்சின் செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் தேக்கமடைவதற்குக் காரணம், அதன் தயாரிப்புகளை சந்தைப்படுத்துவதற்கான விரிவான திட்டம் இல்லாததே என்பது கண்காணிப்புப் பயணத்தின் பின் நடந்த கலந்துரையாடலின் போது தெரியவந்தது.

நிறுவனத்தின் அனைத்து திணைக்களங்களுக்கும் உடனடியாக சந்தைப்படுத்தல் வேலைத்திட்டம் வழங்கப்பட வேண்டுமென அமைச்சின் செயலாளர் வலியுறுத்தினார்.

அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தின் அனுமதி பெற்ற அலுவலக ஊழியர்கள் 769 ஆக இருந்தாலும், தற்போது 311 பேர் மட்டுமே பணிபுரிகின்றனர்.

தொழிற்சாலைகள் திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளின் தற்போதைய நிலைமை மற்றும் சாதகமான முன்மொழிவுகள் குறித்த ஆய்வில் ஈடுபட்டுள்ள அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் அதிகாரிகள், நிறுவனப் பணிகளை மேற்கொள்வதில் ஊழியர்களின் வெற்றிடத்தால் பல பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகத் தெரிவித்தனர்.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரிக்கையை முன்வைத்து தேவைக்கு ஏற்ப ஊழியர்களை பணியமர்த்த முடியும் என அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம் 1849 ஆம் ஆண்டு கொழும்பில் ஐந்து லாம்புச் சந்தியில் அப்போதைய ஆங்கிலேயர் ஆட்சியால் நிறுவப்பட்டது. 1928 ஆம் ஆண்டில், தற்போதைய கொலன்னாவ பிரதேசத்தில் அரச மற்றும் தனியார் துறைகளின் அனைத்து இயந்திர பொறியியல் வேலைகளையும் மேற்கொள்வதற்காக அரசாங்க வேலைத் திணைக்களம் இயந்திரவியல் பணிமனையாக நிறுவப்பட்டது. 1971 ஆம் ஆண்டு, அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம் 'ஏ' தரம் திணைக்களமாக நியமிக்கப்பட்டது.

தற்போது, அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு நீர் கட்டுப்பாட்டு கதவுகளை தயாரித்து, நிறுவி மற்றும் பராமரித்தல், தபால் திணைக்களத்திற்கு திகதி முத்திரைகள் மற்றும் திகதி கட்டைகளை தயாரித்து வழங்குகிறது, பொலிஸ் திணைக்களத்திற்கு இலக்கத் தகடுகள் மற்றும் சார்ஜென்ட் பட்டிகள் தயாரித்தல், மர தளபாடங்கள் தயாரித்து வழங்குதல், நீர் வழங்கல் சபைக்கு நீர் சுத்திகரிப்பு தொட்டிகள் அமைத்தல், அரச நிகழ்வுகளுக்கான வரவேற்பு மேடைகள் அமைத்தல், வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு இரும்பு பாலங்கள் உருவாக்குதல், நிறுவனங்களில் அறைகளை ஒதுக்கீடு செய்தல் (பெயர்ப்பலகைகள் செய்தல் மற்றும் பொருத்துதல், அரச நிறுவனங்களில் வாகன சேவை செய்தல் மற்றும் பராமரித்தல், இலங்கை ரயில் சேவை சீனா சட்டி, பிரேக் பேட்கள் உட்பட சீனச்சட்டியால் செய்யப்பட்ட பொருள்களைத் தயாரித்து வழங்குதல், இலங்கை ரயில்வேக்கு வழங்குதல், மரம் மற்றும் இரும்பினால் வைத்தியசாலை உபகரணங்களை தயாரித்தல், கொதிகலன் மற்றும் எரிவாயு குழாய் அமைப்புகளின் பராமரிப்பு தொழில்நுட்ப மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொறியியல் மாணவர்களுக்கு நடைமுறை பயிற்சிவழங்குதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் இங்கு கருத்து தெரிவித்த அமைச்சின் செயலாளர் திரு.டபிள்யூ.எஸ்.சத்யானந்த -

கடந்த காலங்களில் சில காரணங்களால் அரசாங்க தொழிற்சாலை பின்னடைவை சந்தித்தது. கொவிட் மற்றும் பொருளாதார நெருக்கடி இதில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த நிறுவனத்தை தற்போதைய நிலையில் இருந்து மீட்டெடுக்க நாம் பாடுபட வேண்டும். அதற்கான புதிய திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த வேலையை தனியாக செய்வது கடினம். அதற்கு, நிறுவனம் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் ஆதரவு தேவை. அதனால்தான் இன்று இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தோம். அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம் நாட்டின் அபிவிருத்திக்கு பெரிதும் பங்காற்றிய ஒரு நிறுவனமாகும். இந்த நிறுவனத்தின் சிறந்த காலம் 1960-70 ஆகும். திறந்த பொருளாதாரம் நாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட நிலையில் வெளிநாட்டு நிறுவனங்களின் வருகையாலும், தனியார் துறையினரின் போட்டியாலும் அரசாங்கத் தொழிற்சாலைகள் திணைக்களம் பின்னடைவைச் சந்தித்தன. அரசு நிறுவனம் என்பதால், போட்டித்தன்மையில் அதிக கவனம் செலுத்துவதில்லை. இந்தப் போட்டியை எதிர்கொள்ளக் கூடிய அமைப்பாக நாம் மாறாவிட்டால், நாங்கள் இருக்க மாட்டோம். இந்த தொழிற்சாலையை புனரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். இந்த நிறுவனம் சந்தைப்படுத்தலில் முன்னிலையில் நிற்க வேண்டும். இலாபகரமான நிறுவனத்தை உருவாக்க விரும்புகிறோம். அதற்காக தேவையான திட்டங்களை பிரிவுக்கு பிரிவு வகுக்கவும். தற்போதைய சந்தைக்கு பொருத்தமான விற்பனை ஊக்குவிப்பு திட்டத்தை அமைக்கவும். அதற்கு நாங்கள் அதிகபட்ச ஆதரவை வழங்குகிறோம். - என்றும் கூறினார்.

இந்நிகழ்வில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர்கள், இணை நிறுவனங்களின் தலைவர்கள், பணிப்பாளர்கள், முகாமையாளர்கள் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டனர். (05)

# சம்மாந்துறை வைத்தியசாலை புதிய கட்டடத்தை விரைவில் மக்கள் பாவனைக்கு கையளிக்க முடிவு!



(பாறுக் ஷிஹான்)

சம்மாந்துறை வைத்தியசாலையின் புதிய கட்டடத்தை விரைவில் மக்கள் பாவனைக்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமால் சம்மாந்துறை வைத்தியசாலையின் புதிய கட்டடத்தை விரைவில் மக்கள் பாவனைக்கு கையளிப்பது தொடர்பில் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய சனிக்கிழமை மாலை சம்மாந்துறை வைத்தியசாலைக்கு நாடாளுமன்ற உறுப்பினருடன் சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அதிகாரிகள் விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்டனர்.

இதன் போது குறித்த வைத்தியசாலையின் புதிய கட்டட நிர்மாணங்களை பார்வையிட்ட சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பி.ஜி.மஹிபால தலைமையிலான அதிகாரிகள் பாராட்டியதுடன் வைத்தியசாலையின் இரண்டாம் கட்டமாக பல மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்து நிர்மாணப்பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அவ்விடத்தில் உறுதியளித்தார்.

மேற்குறித்த களவிஜயத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகிலா இஸ்ஸதீன், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.எச். எம் ஆசாத் ஹனீபா, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் திட்டமிடல் வைத்தியர் ஏ.ஆர் . நியாஸ் அஹமட் ,பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம். சீ. எம். மாஹிர், உள்ளிட்ட பிரிவு தலைவர்களும் கலந்து கொண்டனர்.

மேலும் அடுத்தகட்ட பணிகள் தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுகாதார அமைச்சில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் வைத்தியசாலைகளில் அத்தியட்சகர்களையும் குறித்த கலந்துரையாடலில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை விஷேட அம்சமாகும்.

அத்துடன் சுகாதார இராஜாங்க அமைச்சராக பதவிவகித்த காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமின் அயராத முயற்சியின் மூலம் நிந்தவூர் மகப்பேற்று வைத்தியசாலை மற்றும் சம்மாந்துறை. பொத்துவில், ஏறாவூர் ஆகிய பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கு தேவையாகக் கருதப்பட்ட கட்டடங்கள் ஆகியவற்றின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

பின்னர் நாட்டில் ஏற்பட்ட பல்வேறு நெருக்கடிகள் காரணமாக நிர்மாணப்பணிகள் தாமதமடைந்ததைத் தொடர்ந்து, அவற்றை நிறைவு செய்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் பல்வேறு முயற்சிகளை எடுத்துவந்த நிலையில், சம்மாந்துறை வைத்தியசாலையின் புதிய கட்டடத்தை விரைவில் மக்கள் பாவனைக்கு கையளிக்க ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

மேற்படி கோரிக்கைக்கு அமைவாக ஜனாதிபதி செயலகம் குறித்த விடயத்தை சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளது. அதன் பிரகாரம் சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் அதிகாரிகள் நிந்தவூர் மகப்பேற்று வைத்தியசாலை நிர்மாணப்பகுதிக்கும், சம்மாந்துறை, பொத்துவில் மற்றும் ஏறாவூர் வைத்தியசாலைகளுக்கும் கள விஜயம் மேற்கொள்ள உள்ளதோடு, விரைவான தீர்வுகள் பற்றி குறித்த குழுவினருடன் நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் கலந்துரையாடவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# கல்முனை ஸாஹிராக் கல்லூரியின் பழைய மாணவரின் இப்தார் நிகழ்வு

## கட்டாரில் நடந்தது



(நூருல் ஹுதா உமர்)

இலங்கை கிழக்கு மாகாணம் கல்முனை ஸாஹிரா கல்லூரியில் 2002 ஆம் ஆண்டு சாதாரண தரம் மற்றும் 2005 ஆம் ஆண்டு உயர்தரம் கல்விபயின்று தற்போது கட்டாரில் வசிக்கும் பழைய மாணவர்களின் ஒன்றுகூடலும் இப்தார் நிகழ்வும் இடம் பெற்றது.

சனிக்கிழமை கட்டார் ரோட்டன ரெஸ்டாரண்ட் இல் மிக சிறப்பான முறையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கட்டாரில் தொழில் நிமித்தம் வசித்து வரும் கல்முனையைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலானவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# நிந்தவூர் சிறுவர் - மகப்பேற்று வைத்தியசாலைக்கு நிதி ஒதுக்கீடுசெய்ய அமைச்சு செயலாளர் ஒப்புதல்





பாறுக் ஷிஹான்)

திருக்கோவில் ஆதார வைத்தியசாலை மற்றும் ஏனைய வைத்தியசாலைகளின் அடிப்படைக் கட்டமைப்பு மற்றும் இதர வசதிகள் தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட குழுவினர் அம்பாறை மாவட்டத்திற்கு களவிஜயம் ஒன்றை சனிக்கிழமை மாலை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த விஜயத்தின் போது சுகாதார இராஜாங்க அமைச்சராக பதவி வகித்த காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமின் அயராத முயற்சியின் பலனாக 800 மில்லியன் செலவில் நிந்தவூர் மகப்பேற்று வைத்தியசாலையின் முதற்கட்ட நிர்மாணப்பணிகள் இடம்பெற்றன.

இந் நிலையில் சுகாதார இராஜாங்க அமைச்சராக பதவி வகித்த காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமால் முன்னெடுக்கப்பட்ட நிர்மாணப் பணிகளை துரித கதியில் முன்னெடுக்க ஜனாதிபதியிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக ஜனாதிபதி செயலகம் குறித்த விடயத்தை சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அறிவித்திருந்தது.

அதன் பிரகாரம் நாடாளுமன்ற உறுப்பினர் சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் அதிகாரிகள் நிந்தவூர் மகப்பேற்று வைத்தியசாலை நிர்மாணப்பகுதிக்கு கள விஜயம் மேற்கொண்டு ஆய்வுகளை நடத்தியிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக 100 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்மாணப்பணிகளை ஆரம்பிக்க சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பி.ஜி. மஹிபால ஒப்புதல் அளித்துள்ளதோடு குறித்த பணிகளை துரித கதியில் மேற்கொள்ள அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இக் கள விஜயத்தின் அடுத்தகட்ட பணிகள் தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுகாதார அமைச்சில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் வைத்தியசாலைகளில் அத்தியட்சகர்களையும் குறித்த கலந்துரையாடலில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை விஷேட அம்சமாகும்.

குறித்த விஜயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகிலா இஸ்ஸதீன், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம்.மாஹிர், உள்ளிட்ட பிரிவு தலைவர்களும் கலந்து கொண்டனர். (05)

# உலக காசநோய் தினத்தினை முன்னிட்டு நடைபவனியுடன் விழிப்பூட்டல் கருத்தரங்கு








(பாறுக் ஷிஹான்)

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய மார்பு சிகிச்சைப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட நடைபவனியும் விழிப்பூட்டல் கருத்தரங்கும் சனிக்கிழமை அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியில் இடம்பெற்றது.

'ஆம் எம்மால் காச நோயை இல்லாதொழிக்க முடியும்' எனும் தொனிப்பொருளில் பிராந்திய மார்பு சிகிச்சைப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எல்.அப்துல் கபூர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சி.எம். மாஹிர் மலேரியா தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எம்.நௌஷாத், ஆயுர்வேத பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ.நபீல், பாலியல் தொற்று நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் ஐ.எல். ஜலால்தீன் உள்ளிட்ட பிரிவு தலைவர்களும் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் பிரதேச வைத்திய அதிகாரி உள்ளிட்ட வைத்தியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

மேலும் சாய்ந்தமருது ஐ/ம்ஆ பள்ளிவாசல் முன்பாக ஆரம்பித்த நடைபவனி சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை வரை சென்றதுடன் அவ்வைத்தியசாலையில் விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்றும் இடம்பெற்றது. இதன்போது காசநோய் தொடர் பாகவும் அந்நோய்க்கான அறிகுறிகள், அந்நோயிலிருந்து பாதுகாப்பு பெறுதல், சமூகத்தில் காசநோயை கட்டுப்படுத்த முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

உலக காசநோய் தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 24 ஆம் திகதி கடைப்பிடிக்கப்பட்டு வரப்படுகின்றது.

(05)

# வட்டுக்கோட்டை பவிதரன் கொலையில் மேலும் மூன்று சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை இளைஞனைக் கடத்தி படுகொலை செய்த குற்றச்சாட்டில், பிரதான சந்தேக நபர்களில் ஒருவர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 11 ஆம் திகதி காரைநகர் பகுதிக்கு சென்று விட்டு மனைவியுடன், மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த இளைஞனை பொன்னாலை பாலத்திற்கு அருகில் உள்ள கடற்படை முகாமிற்கு முன்பாக வன்முறை கும்பல் ஒன்றால் தம்பதியினர் வாகனத்தில் கடத்திச் செல்லப்பட்டு , இளைஞனை சித்திரவதைக்கு உள்ளாக்கி படுகொலை செய்த கும்பல், மனைவியை சித்தன்கேணி பகுதியில் இறக்கி விட்டு தப்பி சென்று இருந்தது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் ஏற்கனவே ஆறு பேரைக் கைது செய்து , நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 28 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் அடையாள அணிவகுப்பின் போது , கொல்லப்பட்ட இளைஞனின் மனைவியால் அடையாளம் காட்டப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தொடர் விசாரணைகளை முன்னெடுத்து வரும் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் வவுனியா, ஒட்டுசுட்டான் மற்றும் கிளிநொச்சி பகுதிகளில் தலைமறைவாகி இருந்த பிரதான நபர்களில் ஒருவர்

கைது செய்யப்பட்டுள்ளவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார் அவர்களை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதேவேளை சந்தேக நபர்களுக்கு அடைக்கலம் கொடுத்த நபர்களுக்கு எதிராகவும் கடுமையான சட்ட நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுக்கவுள்ளனர்.

தேடப்படும் சந்தேகநபர்களுக்கு அடைக்கலம் கொடுப்பது சிறைத்தண்டனைக்கு உரிய குற்றமாகும். எனவே, வட்டுக்கோட்டை சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுத்து பாதுகாக்கும் நபர்கள் சந்தேகநபர்கள் குறித்து பொலிஸாருக்கு அறிய தருமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.

# பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் 477 முறைப்பாடுகளின் விசாரணைகள் பூர்த்தியாம்!

*பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகள் தொடர்பில் முறைப்பாடுகள் வழங்குவதற்கு, அறிமுகம் செய்யப்பட்ட 109 என்ற அவசர தொலைபேசி இலக்கத்தின் ஊடாக கிடைக்கப்பெற்ற 477 முறைப்பாடுகளின் விசாரணைகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.*

*ஜனவரி மாதம் 4 ஆம் திகதியிலிருந்து மார்ச் மாதம் 10 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அவசர தொலைபேசி இலக்கத்தின் ஊடாக 1,077 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.*

*அவற்றில் 42 முறைப்பாடுகள் தொடர்பில், நீதிமன்றில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் 8 முறைப்பாடுகள் மத்தியஸ்த சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.*

*மேலும், 550 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*பொலிஸ் நிலையங்களுக்கு நேரடியாக சென்று முறைப்பாடுகள் வழங்க முடியாத சிறுவர்கள் மற்றும் பெண்கள் 109 என்ற அவசர தொலைபேசி இலக்கத்தின் ஊடாக இரகசியமாக முறைப்பாடுகளை வழங்க முடியும் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.*

# இஸ்ரேலில் தொழில் தருவதாகக் கூறி பணமோசடி குற்றத்தில் ஒருவர் கைது!

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளின் பெயர்களைப் பயன்படுத்தி, இஸ்ரேலில் விவசாயத் துறையில் வேலை பெற்றுத்தருவதாகக் கூறி பண மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளால் குறித்த நபர் கைது செய்யப்பட்டார் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

குறித்த நபர் கொழும்பு 7, விஜேராம மாவத்தையை வசிப்பிடமாகக் கொண்டவர் என்பதுடன் அவர் வைத்தியராகவும் அடையாளப்படுத்தியுள்ளார்.

சந்தேக நபர் நாரஹேன்பிட்டியில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு அண்மித்த பகுதியில் சிலரை அழைத்து அவர்களிடமிருந்து இவ்வாறு பணத்தை மோசடி செய்துள்ளமையும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர் 9 பேரிடமிருந்து 7 லட்சத்து 65 ஆயிரம் ஷரூபா பணத்தை மோசடி செய்துள்ளார் எனவும் அவருக்கு பணம் வழங்கிய நபர் ஒருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

# பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து

மட்டக்களப்பு வாழைச்சேனை பகுதியில் பஸ்ஸ/டன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று (திங்கட்கிழமை) காலை 10.30.மணியளவில் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குப்பட்ட மீராவோடை பகுதியில் வைத்து இடம்பெற்றுள்ளது.

ஓட்டமாவடி - மீராவோடை ஊடாக மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு பயணிகளை ஏற்றிச் செல்லும் இலங்கை போக்குவரத்து சபையின் வாழைச்சேனை கிளை பஸ்ஸில் மோட்டார் சைக்கிள் மோதி இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த வீதியால் மூன்று மோட்டார் சைக்கிளில் ஓட்டப்பந்தயத்தில் ஈடுபட்ட இளைஞர்களே இவ் விபத்தில் சிக்கியுள்ளனர்.

இதில், இருவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த விபத்தில் காயமடைந்த ஒருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# சிறைக் கைதியினது இடுப்பில் அலைபேசி

## பூஸாவில் சம்பவம்

பூஸா சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய கைதி ஒருவரின் இடுப்பில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைத்தொலைபேசிகளை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

யுக்திய நடவடிக்கையின்போது பூஸா சிறைச்சாலையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே கைதியிடமிருந்து கைத்தொலைபேசிகள் , சார்ஜர்கள் , பெட்டரிகள் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை விசேட அதிரடிப்படை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# மசாஜ் நிலையத்தில் பெண்ணை பலாத்காரமாக கடத்திய கான்ஸ்டபிள் உப்பட இருவர் கைது

குருவிட்ட பிரதேசத்தில் உள்ள மசாஜ் நிலையமொன்றில் காணப்பட்ட பெண் ஒருவரை பலாத்காரமாக கடத்திச் சென்ற குற்றச்சாட்டில் பொலிஸ் புலனாய்வு பிரிவின் கான்ஸ்டபிள் ஒருவர் குருவிட்ட பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் இடம்பெற்றபோது சந்தேக நபருடன் காணப்பட்ட மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தரும் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரும் சிரிபாகல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர்களாவர்.

பிரதான சந்தேக நபர் இரத்தினபுரி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது இரண்டு லட்சம் ஷரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இதேவேளை, பிரதான சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# புங்குடுதீவு விபத்தில் சிக்கியவர் சிகிச்சை பயனின்றி உயிரிழப்பு

யாழ்ப்பாணம் புங்குடுதீவில் ஆலயத்திற்கு சென்று விட்டு, நடந்து வீடு திரும்பி கொண்டிருந்தவர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

புங்குடுதீவை சேர்ந்த ஜோசன் கஜேந்திரன் (வயது 46) என்பவரே உயிரிழந்துள்ளார்.

புங்குடுதீவு பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றிற்கு கடந்த 20 ஆம் திகதி சென்று விட்டு, தனது வீடு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தவர் மீது , வீதியில் வந்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து மோதி விபத்துக்கு உள்ளானது. விபத்தில் படுகாயமடைந்தவர், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# ஜனாதிபதியின் பிறந்த தின நிகழ்வு அட்டாளைச்சேனையிலும் நடந்தது

(எம்.ஏ.றமீஸ்)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பிறந்த தினத்தையொட்டி ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தொகுதி பிரதம அமைப்பாளர் யூ.கே.ஆதம்லெப்பையால் ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட துஆப் பிரார்த்தனை மற்றும் இப்தார் நிகழ்வு என்பன ஞாயிற்றுக்கிழமை மாலை அட்டாளைச்சேனை லொயிட்ஸ் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின்போது மதத் தலைவர்கள், மார்க்க அறிஞர்கள், கல்வியியலாளர்கள், புத்திஜீவிகள், சமூக மட்ட முக்கியஸ்தர்கள், ஊடகவியலாளர்கள், ஐக்கிய தேசிய கட்சியின் அமைப்பாளர்கள், ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, ஜனாதிபதியின் நேர்மையான செயற்பாடுகளுக்கும், சிறந்த ஆட்சிக்குமாக விஷேட துஆப் பிரார்த்தனை இடம்பெற்றது.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சிதைந்து கிடந்த தேசத்தை சீர்படுத்த பல்வேறு பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகிறார் எனவும், அவரது தூர நோக்குள்ள சிறந்த செயற்பாடுகளுக்கு மக்கள் பக்க பலமாக இருக்க வேண்டுமெனவும் இதன்போது பிரஸ்தாபிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நோன்பு துறக்கும் விஷேட இப்தார் நிகழ்வின்போது இன நல்லுறவைக் கட்டியெழுப்பும் வகையில் பல் இன சமூகத்தவர்கள் இதன்போது கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

(05)

# நோன்பு கஞ்சிக்கான அரிசி வழங்கும் நிகழ்வு புத்தளத்தில்

(சியாஜ்)

கற்பிட்டி நகரில் உள்ள பள்ளிவாசல்களுக்கு நோன்பு கஞ்சி சமைப்பதற்கான அரிசியும் பாடசாலை மற்றும் அரபுக் கல்லூரி ஆசிரியர்களுக்கான பேரீச்சம் பழங்களும் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி றஹீம் இனால் வெள்ளிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன .

மேற்படி நிகழ்வு கற்பிட்டி சின்னக்குடியிருப்பு இணைப்பாளர் யூ.எம் ஜின்னாவின் ஏற்பாட்டில் நாடாளுமன்ற உறுப்பினரின் நண்பரும் தொழிலதிபருமான அல்ஹாஜ் அலி சப்ரியின் களஞ்சியசாலை வளாகத்தில் நடைபெற்றது.

இதில் பள்ளிவாசல்களின் நிர்வாகிகள் , அரபுக் கல்லூரி அதிபர்கள், பாடசாலை அதிபர்கள், நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் எம்.எம் நௌபர், இணைப்பாளர் நிஷாத், கற்பிட்டி ஊடக இணைப்பாளர் முஸம்மில் ஆகியோர் கலந்துகொண்டனர்.

புத்தளம் மாவட்டத்தில் உள்ள சுமார் 400 பள்ளிவாசல்களுக்கு 50 கிலோ அரிசி வீதம் தனது சொந்த நிதியின் ஊடாக வழங்கப்பட்டு உள்ளதுடன் துபாய் நாட்டு பிரதிநிதி ஒருவரால் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி றஹீம் கிடைக்கப் பெற்ற பேரீத்தம் பழங்களும் மாவட்ட மட்டத்தில் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அரபுக் கல்லூரி உஸ்தாத் மார்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

(05)

# 50 ரயில் நிலையங்களுக்கு நீர் சுத்திகரிப்பு தொகுதி ஞானம் அறக்கட்டளை வழங்கல்!

அனைத்துலக நீர் தினத்தை முன்னிட்டு லைக்கா ஞானம் அறக்கட்டளையினர் இலங்கை முழுவதும் அமைந்துள்ள 50 ரயில் நிலையங்களில் குடிநீர் சுத்திகரிப்பு தொகுதியை உருவாக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளனர்.

மார்ச் 22 ஆம் திகதி அன்று கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் குறித்த விடய அறிவிப்பு மேற்கொள்ளப்பட்டது.

முதற் தொகுதியாக 50 ரயில் நிலையங்களுக்கான குடிநீர் வழங்கல் செயற்பாடுகள் ஆரம்பிக்கபடவுள்ளமையுடன் ஏனைய ரயில் நிலையங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

லைக்கா ஞானம் அறக்கட்டளையின் நிறுவுநர் அல்லிராஜா சுபாஸ்கரனின் வழிப்படுத்தலில் குறித்த குடிநீர் வழங்கல் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் லைக்கா ஞானம் அறக்கட்டளையினூடாக மாத்தறை பனவில கிராமத்துல் நூறுக்கு மேற்பட்ட மக்களுக்கான குடிநீர் பெற்றுக்கொள்வதற்கான குடிநீர் இணைப்பும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் அனைத்துலக நீர் தினத்தை முன்னிட்டு லைக்கா ஞானம் அறக்கட்டளையின் 25 மாவட்ட சமுதாயக் கூடத்தில் பாடசாலை மாணவர்களுக்கான சித்திர திருவிழாவும் நடைபெற்றுவருகின்றமை குறிபிடத்தக கது.

(05)

# ஈழத்தமிழர்களுக்கு எதிராக பதவியைத் துறந்தவர் அநுர

## கனடா அரசியல் ஆய்வாளர் சாடல்

இடைக்கால நிர்வாக சபை கட்டமைப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்து தனது அமைச்சரவை பதவியை துறந்தவர்களில் ஒருவர் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க என கனடாவில் இருக்கும் அரசியல் ஆய்வாளர் நேரு குணரட்னம் தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்கவின் கனடா விஜயம் தொடர்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கனடாவில் வாழும் இலங்கையர்களிடம் உரையாற்றும் நோக்கில் பல பொதுக்கூட்டங்களில் பங்கேற்பதற்காகவே அநுர குமார திஸாநாயக்க கனடாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

இதன்போது அவர் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வான்கூவர் நகரில் இடம்பெறவுள்ள பேரணியில் கலந்துகொள்ள உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில், கனடாவிற்த வருகை தருமாறு அநுர குமார திஸாநாயக்கவிற்கு யாரும் அழைப்பு விடுக்காத நிலையில், கனடாவிற்கு வருகை தந்த பலம் பொருந்திய சிங்கள தலைவர் என்ற பெயரை அநுர பெற்றுள்ளார் எனவும் கூறியுள்ளார்.

(05)

# கோட்டாபயவை விரட்டி அடித்தவர்கள் தமிழ்மக்கள் அல்லர் என்கிறார் பஸில்

கோட்டாபய ராஜபக்சவை ஜனாதிபதிப் பதவியில் இருந்து விரட்டியது தமிழ் - முஸ்லிம் மக்கள் தான் என்பதை ஏற்க முடியாது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கருத்துக் கூறுகையில் -

ஜனாதிபதி வேட்பாளருக்குத் தகுதியானவர் ரணில் விக்ரமசிங்கதான்.

பொருளாதார ரீதியில் வீழ்ச்சிப் பாதையில் சென்ற இந்த நாட்டை அவர் மீட்டெடுத்திருக்கிறார். அனைத்துப் பிரச்சினைகளும் மெல்ல தீர்ந்துகொண்டு வருகின்றன.

முதலில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடு. இதை நான் ஜனாதிபதி ரணிலிடம் கூறியிருக்கின்றேன். - எனத் தெரிவித்துள்ளார்.

(05)

JRIDE
BEYOND THE ROAD

Safety and comfort are our concern

ஜேரைட்
# JRIDE
## TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide

DOWNLOAD PASSENGER APP:

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
**நாங்கள் தயாராகிவிட்டோம்!**
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)



JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install

JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install

இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store



**வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!**
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!

இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!

DOWNLOAD DRIVER APP:

JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install

JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install

YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE

GET IT ON Google Play
Download on the App Store

## SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி

நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?

விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?

எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

HOTLINE : 706563213 / 703563213



**JRIDE TAXI APP**
**SPEED IT NET**
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.03.2024இல் வெளியிடப்பெற்றது